# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர்-18 இதழ்-12 டிசம்பர்-2005




## கிறிஸ்துவின் சபை

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

✆ 04257 - 230030 Cell : 98427 - 30382 , 98428 - 30382
E-mail : kangayamcofc@eth.net

# BIBLE MEDITATION

## TV PROGRAM




## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. நியாயத்தீர்ப்பு நாள் உண்டென்று நாம் ஏன் நம்புகிறோம் ? ........ 10
3. பெண்கள் பகுதி ........ 16
4. வாலிபர் பகுதி ........ 21
5. சிறுவர் பகுதி ........ 24
6. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 26
7. கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள் ........ 30

# THIRUMARAI AASAAN
Published by Church of Christ

S. Rajanayagam
Editor

J.C. Choate
Honorary Editor

Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 18 DECEMBER - 2005 Issue - 12**

ஆசிரியர் உரை

## உங்களைப் பரிசுத்தம் பண்ணிக் கொள்ளுங்கள்

இந்த இதழ் உங்கள் கைகளில் வந்து சேரும் போது, இம்மட்டும் நடத்தின இம்மானுவேல் இனியும் நடத்துவார் என்ற நம்பிக்கையோடு எஞ்சியிருக்கும் இவ்வருடத்தின் நாட்களைக் கழித்துப் புதிய ஆண்டுக்குள் அடியெடுத்து வைக்க ஆவலோடு காத்துக் கொண்டிருப்பீர்கள். இந்தச் சந்தர்ப்பம் தான், இவ்வருடத்தில் நாம் கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்கும் நேரம். அப்படித் திரும்பிப் பார்க்கும் நாம், எதிர்வரும் புதிய ஆண்டுக்கான சீர்மிகு திட்டங்களை சரீர வாழ்வுக்கும், ஆன்ம வாழ்வுக்கும் தீட்டுவோம். புதிய ஆண்டில், நான் அப்படியிருக்க வேண்டும், இப்படியிருக்க வேண்டும், அதைச் செய்யவேண்டும், இதைச் செய்ய வேண்டுமென்றெல்லாம் சில தீர்மானங்களை எடுக்கத் தீவிரமாய் ஆலோசிப்போம். ஒருவேளை கடந்த வருடம் இதே வேளையில், இப்படியாக எடுத்த தீர்மானங்கள் பல எடுத்த எடுப்பிலேயும், பாதியிலேயும் பஸ்பமாகி யிருந்தாலும் அதைப்பற்றியெல்லாம் கொஞ்சமும் அலட்டிக்கொள்ளாமல், இவ்வருட தீர்மானங்களில் முழு மூச்சாக நம்மை ஈடுபடுத்திக் கொண்டிருப்போம். அப்படித்தானே!

சரி, திருமறை ஆசான் வாசகர்களாகிய நம் அநேகருடைய எண்ண ஓட்டங்கள் இப்படியாக இருந்து, புத்தாண்டுக்காகக் காத்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில், பரலோகத்தின் தேவன், நாம் எடுக்கும்படியாக எதிர்பார்க்கும் **புத்தாண்டுத் தீர்மானம்** என்னவென்று கவனித்து, அதில் நம் சிந்தையைச் செலுத்துவோம். அத்தீர்மானம், **உங்களைப் பரிசுத்தம் பண்ணிக் கொள்ளுங்கள்** என்பது.

பரலோகத்தின் தேவன் மனிதனிடத்தில் எதிர்பார்க்கும் எந்தவொரு காரியத்தையும் அவர் தமக்காகக் கேட்பதில்லை. அதுபோல, மனிதனுக்கு கொடுத்திருக்கும் எந்தவொரு கட்டளையையும் அவர் தமக்காகக் கொடுப்பதில்லை. மனிதனுடைய சரீர நன்மைக்காகவும், ஆன்ம

வாழ்வுக்காகவுமே அவைகளைக் கேட்கிறார் மற்றும் அவைகளைக் கொடுத்துள்ளார். உபாகமம் 28:1-ம் வசனத்தைக்கவனியுங்கள், "இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின் படியெல்லாம் செய்ய நீ கவனமாயிருக்கும்படிக்கு, **அவர் சத்தத்திற்கு உண்மையாய்ச் செவி கொடுப்பாயானால், உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார்.** இன்னும், புதிய ஏற்பாட்டில், அப்போஸ்தலன் பவுல் எபேசியருக்குச் சொல்லும்போது, **உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும் பூமியிலே உன் வாழ்நாள் நீடிப்பதற்கும், உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக.....** என்று கூறியுள்ளார் (எபே. 6:1)

இப்படி மானிடத்தின் ஒட்டுமொத்த நன்மைக்காகவே பிரமாணங்களைக் கொடுத்துள்ள தேவன் தான், மாபெரும் தலைவனாகிய யோசுவாவின் பெயரைத் தாங்கி நிற்கும் நூலில், **உங்களைப் பரிசுத்தம் பண்ணிக் கொள்ளுங்கள்** (யோசு. 3:5) என்று கூறியுள்ளார். பரிசுத்தம் பண்ணுங்கள் என்று மாத்திரம் கூறாமல், பரிசுத்தம் எதற்காக என்பதற்கான காரணத்தையும் வெளிப்படுத்தியுள்ளார். நான் சொல்லுகிறபடி நீங்கள் உங்களைப் பரிசுத்தம் பண்ணினால், **நாளைக்கு உங்கள் நடுவே அற்புதம் நடக்கும்** என்று. ஆக, இவ்வசனத்தில், மனிதனின் பரிசுத்தத்தைத் தேவன், அவனுடைய நன்மைக்காகவே எதிர்பார்க்கிறார் என்பது திட்டமாகிறது. அநேகராகிய நாம், இந்த உண்மை தெரியாதவர்களாகவே வாழ்ந்து நம்முடைய நாட்களையும், வருடங்களையும் வீணடித்துக் கொண்டுள்ளோம்.

மனிதன் தன்னைப் பரிசுத்தம் பண்ணிக் கொள்ள வேண்டுமென்ற தேவ கட்டளை, ஏதோ ஒரு குறிப்பிட்ட காலத்துக்காக மாத்திரம் கொடுக்கப்பட்ட ஒன்று அல்ல. உலகம் உண்டானது முதல் எல்லாக் காலங்களிலும் வாழ்ந்த மக்களுக்கு அது அவசியமானதாகவே இருந்துள்ளது. மோசேயின் காலத்தில் கேட்ட அதே பரிசுத்தத்தை, தேவன், கிறிஸ்துவின் காலத்தில் வாழும் நம்மிடமும் கேட்கிறார். பேதுரு அப்போஸ்தலன், **உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல நீங்களும் உங்கள் நடக்கைக ளெல்லாவற்றிலும் பரிசுத்தராயிருங்கள்** என்று கூறியுள்ளார் (1பேதுரு 1:15) ஆகவே, பரிசுத்தம் பழைய ஏற்பாட்டில் தான் கேட்கப்பட்டுள்ளது, நமக்கு அதைப் பற்றி என்ன என்று எண்ணக்கூடாது.

சரி, மேலும் இதற்குள்ளாகச் சென்று காரியங்களை அலசும் முன்பாக, நமது வழக்கத்தின்படியாக, நமது தலைப்புக்கான பின்னணியைக் கொஞ்சம் பார்த்து விடுவோம்.

யோசுவா 3-ம் அதிகாரத்தில், தேவன், சுமார் 750 ஆண்டுகளுக்கு முன்பாக, **உன்னைப் பெரிய ஜாதியாக்குவேன் என்றும், உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன் என்றும்**, கொடுத்த வாக்குத்தத்தம் நிறைவேறும் படியான நேரம் நெருங்கிவிட்டது (ஆதி. 12:2,7) வாக்கைப் பெற்ற ஆபிரகாமும், அவன் குமாரனும், பேரனுமான ஈசாக்கு, யாக்கோபு போன்றவர்களும் பரதேசிகளாகவே சுற்றி திரிந்தனர். அதன்பிறகு, இவர்கள்

சந்ததி 400 ஆண்டுகள் எகிப்தில் அடிமை வாழ்க்கை. அதற்குப்பிறகு, விடுதலை பெற்றும் 40 ஆண்டுகள் வனாந்திர வாழ்க்கை என்று இப்படியாகக் காலங்கள் கழிந்த நிலையில், **வாக்கு மாறாத தேவன்,** தன் வாக்கை நிறைவேற்றச் சித்தங்கொண்டார்.

இங்கே நாம் ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். தேவன் நமக்குக் கொடுத்துள்ள மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களெல்லாம், நம்முடைய வாழ்க்கையில் **சுடச்சுட நிறைவேற வேண்டுமென்று** எதிர்பார்க்கிறோம். நாம் ஒரு காலண்டரை நமக்காக வைத்துக் கொண்டு, காரியங்கள் அதின்படியாக நடக்க வேண்டுமென்றும், தேவன் நம்முடைய எதிர்பார்ப்பின்படியாகக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்றும் எதிர்பார்க்கிறோம். அப்படி நடக்காத பட்சத்தில், சலித்துப்போய், தேவனுடைய வல்லமையைக் கேள்வி கேட்கத் துணிவதோடு நிறுத்தாமல், நம்முடைய விசுவாசத்திற்கு விடையும் கொடுத்து விடுகிறோம். ஆனால், தேவன் அவருடைய காலண்டர் படிதான் காரியங்களை நடப்பிக்கிறார் என்பதை ஒருவன் தெரிந்து கொள்வது அவசியம்.

பரிசுத்த வேதாகமத்தில் மூன்று காலங்கள் உண்டு. இந்த மூன்று காலங்களிலும் தேவனின் செயல்பாடு இவ்விதமாகவே இருந்துள்ளது. வாக்குக் கொடுத்த தேவன், **அந்த வாக்கை நிறைவேற்ற தமது தாசர்களைக் காக்க வைத்து அதன் பிறகே நிறைவேற்றியுள்ளார்.** முற்பிதாக்களின் காலத்தில் வாழ்ந்தவர்களைச் **சரீர கானானுக்காக** சுமார் 750 ஆண்டுகள் காத்திருக்கும்படி செய்தார். மோசேயின் காலத் தவரை **மேசியாவின் வருகைக்காக** 1000 ஆண்டுகள் வரை காத்திருக்கும்படி செய்தார் (லூக். 2:25, யோவா 1:45) இன்று கிறிஸ்துவின் காலத்தில் வாழ்கிற நம்மைக் **கிறிஸ்துவின் வருகைக்காக** சுமார் 2000 ஆண்டுகளாகக் காக்க வைத்துள்ளார் (பிலி. 3:20)

சர்வ வல்ல தேவன் தனது வாக்கை நிறைவேற்ற ஏன் இவ்வளவு காலம் எடுத்துக் கொள்கிறார்? ஏன் நாம் எதிர்பார்க்கும் நேரத்தில் அவர் செய்வதில்லை? இந்தக் கேள்விகளுக்குப் பதில் என்னிடத்தில் இல்லை. இதற்கான காரணம் நமக்கு விளங்காததால், அவரை ஏன் என்று கேள்வி கேட்டு விடவும் முடியாது. ஏனெனில், அவர் தேவன். இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு ஒரு சமயம் சீடர்கள் இயேசுவிடம் "...... **ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர் என்று கேட்டபோது, அதற்குப் பதிலாக, பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும், வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல**" என்று கூறியுள்ளார் (அப். 1:6,7) இதன் பொருள் என்ன? அவருடைய செயலை நீ கேள்வி கேட்காதே என்பது தானே!

ஆனாலும், காத்திருந்து ஒன்றைப் பெற்றுக்கொள்வது மேன்மையானது என்பதை ஞானி சாலமோனைக் கொண்டு பரிசுத்த ஆவியானவர் கூறுவதைக் கவனியுங்கள். **நெடுங்காலமாய்க் காத்திருப்பது இருதயத்தை இளைக்கப்பண்ணும். விரும்பினது வரும்போதோ ஜீவ விருட்சம் போலிருக்கும் என்று.** (நீதி. 13:12).

இப்பொழுது, தேவன் விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றும்படியான வேளை வந்துவிட்டது. வாக்குமாறாத தேவன் இங்கே தயார். ஆனால், அதைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறவர்கள் அதற்குத் தகுதியா என்று பார்க்கிறார். தகுதியில்லாதவர்களுக்கும், தான் கேட்பதைச் செய்யாதவர்களுக்கும், தான் சொல்லுவதைக் கேட்காதவர்களுக்கும், தேவன் ஒன்றைக் கொடுப்பதில்லை. ஆதியிலிருந்து அவருடைய செயல்பாடு இப்படியாகத்தான் உள்ளது. சொல்லப்போனால், அவர் எதிர்பார்க்கும் தகுதியில்லாவிட்டால், கொடுத்ததையும் அவர் பிடுங்கிக் கொள்ளுகிறவராகவே இருக்கிறார். ஆம், தன் தகப்பனின் கழுதைகளைத் தேடிச் சென்ற **சவுலை ராஜாவாக்கியதும்**, அவன் சரியில்லாத போது, **ராஜ்யபாரத்தைப் பிடுங்கிக் கொண்டதும்** இதற்கு மிகச் சிறந்த ஓர் உதாரணம். (1 சாமு. 15:17,23)

சரி, இங்கே, ஆபிரகாமின் சந்ததியாரைக் கானானைப் பெற்றுக் கொள்ளும்படியாய் ஆயத்தம் செய்யச் சொல்லுகிறாரே, அது எதற்காக? இவர்கள் ஆயத்தமாவதால் தேவனுக்கு ஏதாகிலும் அனுகூலம் உண்டா? எதற்காகப் பரிசுத்தம்? சொல்லுங்கள். **நாளைக்கு இஸ்ரவேலர் நடுவே அற்புதம் நடக்கப்போகிறது** அதற்காகவே பரிசுத்தம். ஆம், வரப்போகும் நாட்களில் அவர்களைப் பல சவால்கள் எதிர்கொள்ள இருக்கிறது. அவைகளைச் சந்தித்து மேற்கொள்ளவே பரிசுத்தம். **ஆக, இஸ்ரவேலரிடம் தேவன் கேட்கும் பரிசுத்தம் அவருக்காக அல்ல, மாறாக, அதை யாரிடத்திலே கேட்கிறாரோ அவர்களுக்குத்தான்**. ஒருவேளை, அது பரிசுத்தம் உன்னிடத்திலே கேட்கப்படுமானால், உன்னுடைய நன்மைக்காகத் தான்! இக்காரியத்தில் நம் நினைப்பு வேறுவிதமாக இருந்தால் நாம் உடனடியாக மாற்றிக் கொள்வது நல்லது.

இங்கே, நாம் இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். தேவனுக்காக நாம் செய்யும் ஆயத்தமானது ஆவிக்குரிய ரீதியிலிருக்க வேண்டுமென்றே கேட்கப்படுகிறது. சரீரக் கானானுக்குள் பிரவேசிக்க ஆயத்தம் செய்யுங்கள் என்று சொல்லும் தேவன், பட்டயத்தை உருவுங்கள் என்றோ, கத்தியைத் தீட்டுங்கள் என்றோ, வாளை வீசுங்கள் என்றோ, ஈட்டியை எறியுங்கள் என்றோ அல்லது உங்கள் தேகத்தை முறுக்கேற்றுங்கள் என்றோ கூறாமல், **உங்களைப் பரிசுத்தம் பண்ணிக் கொள்ளுங்கள்** என்றே கூறியுள்ளார்.

சர்வவல்ல தேவன், ஒருவனை ஆசீர்வதிக்கத் தீர்மானிக்கும்போது, சரீரப் பிரகாரமாக அவனிடத்தில் என்ன இருக்கிறது? எவ்வளவு இருக்கிறது? எப்படியிருக்கிறதென்றெல்லாம் பார்ப்பதில்லை. ஒன்றுமில்லாமையிலிருந்து எல்லாவற்றையும் உருவாக்கின தேவனுக்கு, தாம் விரும்புகிறவனுக்கு நன்மையை, ஆசீர்வாதத்தைக் கொடுப்பது இலேசான காரியம். ஆகவே, தேவன் தந்துள்ள அளவற்ற ஆசீர்வாதங்களை என் வாழ்வில் பெற்று அனுபவிக்க எனக்கு அது இல்லை, இது இல்லை என்று ஏங்கவோ, படிப்பு இல்லை, பட்டம் இல்லை, பொருள் இல்லை, பணம் இல்லை, செல்வம் இல்லை, செல்வாக்கும் இல்லை என்று கவலைப்படவோ தேவையில்லை. பரலோகத் தகப்பன், நம்மிடத்திலிருப்பதை அல்ல, நம்மைத் தான் கேட்கிறார்.

சரி, பரிசுத்தம் என்ற அழகிய தமிழ் வார்த்தைக்கான பொருள் பற்றி ஒரு வேத அறிஞன் இவ்விதம் கூறுகிறார். **தேவனுக்கும், மனிதனுக்கும் இடையே நிலவும் உறவைப் பற்றிப் பேசுவதே பரிசுத்தம்** என்று. இப்பொருளினடிப்படையில் பார்த்தால், "உங்களைப் பரிசுத்தம் பண்ணிக் கொள்ளுங்கள் என்பதும்", "உங்களுக்கும், தேவனுக்கும் இடையிலான உறவைச் சீர்படுத்திக் கொள்ளுங்கள்" என்பதும் ஒன்றே.

அப்படியானால், தேவனுடனான உறவை ஒருவன் சீர்படுத்த என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வி வருகிறது. இதற்கான பதில், இரண்டு பகுதிகளைக் கொண்டது. **முதலாவது**, தேவனுக்கு விரோதமான வைகளிலிருந்து ஒருவன் தன்னை முற்றிலும் விலக்கிக்கொள்வது. **இரண்டாவது**, தேவச்சித்தம் செய்யும்படி ஒருவன் தன்னை சமூலமாய் ஒப்புக்கொடுப்பது. அதாவது, **கர்த்தர் நிமித்தம் விலக்க வேண்டிய அனைத்தையும் விலக்கி, அதே கர்த்தர் நிமித்தம் செய்ய வேண்டிய எல்லாவற்றையும் செய்ய ஒப்புக் கொடுப்பதே பரிசுத்தம்.** இவ்விளக்கத்தின டிப்படையில், வேத வசனங்களைக் கொண்டு, பரிசுத்த வாழ்வை நாம் எட்டிப் பிடித்துவிட்டால், தேவன் நம்முடைய சரீர வாழ்விலும், ஆன்ம வாழ்விலும் அற்புதமான காரியங்களைச் செய்வார். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமேயில்லை.

இப்பொழுது, பரிசுத்தத்திற்கான பதிலின் இரண்டு பகுதிகளையும் சற்று விரிவாகப் பார்த்து, பாடம் கற்று, பரிசுத்தத்திற்கான படிகளில் வெற்றி நடைபோட்டு, எதிர்வரும் புதிய ஆண்டில், தேவ ஆசீர்வாதத்தைப் பெற்று கிறிஸ்துவுக்குள் பெருவாழ்வு வாழ முயற்சிப்போம்.

## I தேவனுக்கு விரோதமானவைகளை விலக்குவது

நம்மைப் பரிசுத்தம் பண்ணி, நம்முடைய வாழ்க்கையில் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கான இரண்டு வழிகளில் முதலாவது, தேவனுக்கு விரோதமானவைகளிலிருந்து நம்மை முற்றிலும் விலக்கிக் கொள்வது.

மாபெரும் தலைவனாகிய யோசுவாவின் தலைமையின் கீழ் யோர்தானை வெட்டாந்தரையில் நடப்பது போல் நடந்து கடந்த இஸ்ரவேல் ஜனம், அரண்கள் சூழ்ந்த பட்டணமாகிய எரிகோவை, ஆர்ப்பரித்துத் தரைமட்டமாக்கினர் (யோசு 6:20). இந்த எரிகோவை இவர்கள் கையில் தேவன் ஒப்புக்கொடுக்கும் முன்பாக, ஓர் எச்சரிக்கை கொடுத்திருந்தார். **ஆனாலும், இந்தப்பட்டணமும், இதிலுள்ள யாவும் கர்த்தருக்குச் சாபத்தீடானதாயிருக்கும் ..... சாபத்தீடானதில் ஏதாகிலும் எடுத்துக் கொள்ளுகிறதினாலே, நீங்கள் சாபத்தீடாகாதபடிக்கும், இஸ்ரவேல் பாளயத்தைச் சாபத்தீடாக்கி அதைக் கலங்கப் பண்ணாதபடிக்கும், நீங்கள் சாபத்தீடானதற்கு மாத்திரம் எச்சரிக்கையாயிருங்கள்** (யோசு 6:17,18).

இங்கே, இந்தப் பட்டணமும் இதிலுள்ள யாவும் கர்த்தருக்குச் சாபத்தீடானதாகும். சாபத்தீடான ஒன்றையும் எடுத்துக் கொள்ளக் கூடாது என்பது தேவ எச்சரிப்பு. கர்த்தருக்குச் சாபத்தீடானது என்று சொல்லும் போது, **அங்குள்ள யாவும் கர்த்தருக்கு விரோதமானது** என்று பொருள். அதாவது,

அங்குள்ள எதையும் தொடக்கூடாது, எடுக்கக்கூடாது. எரிகோவில் காணும் எல்லாவற்றையும், ஒருவேளை அது எவ்வளவு சிறந்ததாக இருந்தாலும் அதை அவர்கள் **முற்றிலும் விலக்க வேண்டும்.**

ஆனால், நடந்தது என்ன? கர்மியின் குமாரனாகிய ஆகான் என்பவன் "கொள்ளையிலே நேர்த்தியான ஒரு பாபிலோனிய சால்வையையும், இருநூறு வெள்ளிச் சேக்கலையும், ஐம்பது சேக்கல் நிறையான ஒரு பொன் பாளத்தையும் கண்டு, அவைகளை இச்சித்து எடுத்து பூமிக்குள் புதைத்து வைத்தான்" (யோசு. 7.21) இதன் மூலம் **தேவ எச்சரிப்பை மீறினான். இதற்கான விளைவை இஸ்ரவேலர் சந்தித்தனர்.** எப்படி முடியும் இந்த **எரிகோவை** வெற்றி கொள்வது என்று மலைத்து நின்ற இஸ்ரவேலர், வெறும் சத்தத்தோடு அதைத் தரைமட்டமாக்கிவிட்டு, அட **ஆயி**தானே என்று எண்ணிய சிறிய பட்டணத்தில் - இரண்டாயிரம், மூவாயிரம் பேர் போதும் என்று எண்ணிய இடத்தில், புறமுதுகு காட்டி முறிந்தோடினார்கள் (யோசு 7:4)

ஆகானின் சாபத்தீடான செயலை அறியாத யோசுவா, தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு, அவனும், இஸ்ரவேலரின் மூப்பரும் சாயங்காலமட்டும் கர்த்தரின் பெட்டிக்கு முன்பாகத் தரையிலே முகங்குப்புற விழுந்து, தங்கள் தலைகளின்மேல் புழுதியைப் போட்டுக் கொண்டு ''..... ஆ, ஆண்டவரே, இஸ்ரவேலர் தங்கள் சத்துருக்களுக்கு முதுகைக் காட்டினார்கள்; இப்பொழுது நான் என்ன சொல்லுவேன். கானானியரும், தேசத்துக் குடிகள் யாவரும் இதைக் கேட்டு, எங்களை வளைந்து கொண்டு, எங்கள் பேரைப் பூமியிலிராதபடிக்கு வேரற்றுப் போகப் பண்ணுவார்களே, அப்பொழுது, உமது மகத்தான நாமத்துக்கு என்ன செய்வீர்'' என்றான் (யோசு 7:6-9).

அப்பொழுது கர்த்தர், ''........ **நாளைய தினத்துக்கு உங்களைப் பரிசுத்தம் பண்ணிக் கொள்ளுங்கள்...... நீங்கள் சாபத்தீடானதை உங்கள் நடுவிலிருந்து விலக்காதிருக்கு மட்டும், நீங்கள் உங்கள் சத்துருக்களுக்கு முன்பாக நிற்கக் கூடாது**'' என்றார். (7:13) ஆக, பரிசுத்தம் பண்ணிக் கொள்ளுங்கள் என்பதன் பொருள், **தேவனுக்காக விலக்க வேண்டியதை விலக்குவதாகும்.** அப்படி விலக்காத பட்சத்தில், தேவன் அவர்களிடமிருந்து விலகி விடுவார். அப்படி தேவன் விலகிவிட்டால் தோல்வியும், இரட்டும், சாம்பலும், கண்ணீரும், சஞ்சலமும் தான் வாழ்க்கையாகும்.

இதை வாசிக்கும் எனதருமை நண்பரே, சகோதரரே, எதிர்வரும் புதிய ஆண்டில், பரலோகத்தின் தேவன் நிமித்தம், உங்கள் ஆன்மீக வாழ்க்கையில் விலக்கவேண்டியவைகளை விலக்கி உங்களைப் பரிசுத்தம் செய்து கொள்ள நீங்கள் ஆயத்தமா? விலக்க வேண்டியவைகளை விலக்கி நம்மைப் பரிசுத்தம் செய்யும் போதுதான், நம்முடைய வாழ்க்கையில் அற்புதமான காரியங்களைச் செய்வேன் என்று தேவன் சொல்லுகிறதை நீங்கள் மறந்துவிடவோ அல்லது அற்பமாக எண்ணி விடவோ வேண்டாம்.

கிறிஸ்துவின் காலத்தில் வாழும் நமக்கு, தேவன், இயேசுவைக் கொண்டு கொடுத்த புதிய ஏற்பாட்டு உபதேசத்துக்கு விரோதமான எல்லாமே விலக்க வேண்டியவை தான். கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்கு மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல (யோவா. 9) நாம் தேவனை

உடையவர்களாயிருப்பதற்கு கிறிஸ்துவின் உபதேசம் அவசியமாயிருக்கும் போது, நம்முடைய பரிசுத்தத்திற்கு மாத்திரம் கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசம் அவசியமாகாதா என்ன? ஆக, புதிய ஆண்டில் நாம் சரீரத்திலும், ஆவியிலும் ஆசீர்வாதமாக இருப்பதற்கு, புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்கு எதிரான எல்லாவற்றையும் விலக்கி விட்டு பரிசுத்த வாழ்வு வாழ்வோமாக!

**II தேவனுக்காகச் செய்ய வேண்டியவைகளுக்கு ஒப்புக்கொடுப்பது**

நம்மைப் பரிசுத்தம் பண்ணி, எதிர்வரும் புதிய ஆண்டில், நம்முடைய வாழ்க்கையில் தேவ ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கான அடுத்த வழி, தேவனுக்காகச் செய்ய வேண்டியவைகளைச் செய்ய நம்மை முற்றிலும் ஒப்புக்கொடுப்பது.

இதற்கு மிகச் சிறந்த உதாரணமாக, லேவியராகமத்தில் காணப்படும் நாதாப், அபியூ சம்பவத்தை நாம் எடுத்துக்கொள்ள முடியும். அங்கே, தேவ சமூகத்தில் ஆசாரிய ஊழியம் செய்யும்படியான பாக்கியம் பெற்ற நாதாபும், அபியூவும், **கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாத அந்நிய அக்கினியை** அவருடைய சந்நிதியில் கொண்டு வந்தார்கள். அதினால், அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, அவர்களைப் பட்சித்தது. அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் செத்தார்கள். (லேவி 10:1,2).

இவ்விருவரும் ஏன் செத்தார்கள் என்பதற்கான காரணம் முதல் வசனத்திலேயே ஓரளவு காணப்பட்டாலும், மூன்றாம் வசனம் இன்னும் தெளிவான காரணத்தை வெளிப்படுத்துகிறது. "**அப்பொழுது மோசே ஆரோனை நோக்கி; என்னிடத்தில் சேருகிறவர்களால் நான் பரிசுத்தம் பண்ணப் பட்டு; சகல ஜனங்களுக்கும் முன்பாக நான் மகிமைப்படுவேன் என்று கர்த்தர் சொன்னது இதுதான் என்றான்......**" (10:3) இவ்வசனம், தேவனிடத்தில் சேருகிறவர்களால், அவர் பரிசுத்தம் பண்ணப்படவேண்டுமென்று கூறுகிறது; ஆனால், நாதாபும், அபியூவும் அப்படிச் செய்யாததால் தண்டனை பெற்றார்கள் என்று திட்டமாகக் கூறுகிறது.

அப்படியானால், இந்த நாதாபும், அபியூவும் செய்த தவறு என்ன? **கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாதவைகளைச் செய்தார்கள்**. அவர்களின் தவறு விளங்குகிறதா? கர்த்தருடைய காரியத்தில் எப்படி நடக்க வேண்டுமென்று புரிகிறதா? அவர்கள் கொண்டு வர வேண்டிய அக்கினி, **கர்த்தருடைய சந்நிதியிலிருக்கும் பலிபீடத்தின் மேலுள்ள நெருப்புத் தணலேயொழிய** (லேவி 16:2) மற்றபடி தாங்கள் விரும்புகின்ற அக்கினி அல்ல. ஒருவேளை நாம் கேட்கலாம், அக்கினி எதுவாக இருந்தால் என்ன எல்லாமே சுடக்கூடியதாகத்தானே இருக்கும், இது என்ன பெரிய தவறா என்று. அதுவும், உடனடியாக மரண தண்டனை தரத்தக்க அளவு கொடியதா என்று. நம்முடைய அறிவின்படி இப்படி நினைப்பதிலும், கேட்பதிலும் நியாயமில்லாமலில்லை. ஆனால், தேவன் ஒருபோதும் தவறிழைக்கமாட்டார் என்பதும், காரண காரியமில்லாமல் ஒருவனைத் தண்டிக்கமாட்டார் என்பதும் நம்முடைய மனதின் ஆழத்தில் எப்போதும் இருக்க வேண்டும்.

இதை வாசிக்கும் எனதருமை வாசக அன்பரே, இந்த அடிப்படையில் நம்முடைய பரிசுத்தம் எப்படியுள்ளது? நம்முடைய ஆன்மீக வாழ்வின் நிலையை அலசிப்பார்ப்பதற்கு வருடத்தின் இறுதி ஒரு சரியான சமயமாதலால் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன்.

யோசுவாவின் நாட்களில், பரிசுத்தம் பண்ணிக் கொள்ளுங்கள் என்று சொன்ன தேவன், அதற்கான நியமங்களையும் அவர்களுக்கு கொடுத்தார் என்பதையும் கவனியுங்கள். **ஆம், நீங்கள் நடக்க வேண்டிய வழியை அறியும்படிக்கு, உடன்படிக்கைப் பெட்டியைப் பின்பற்றுங்கள் என்றார்** (3:3) உடன்படிக்கைப் பெட்டிக்குள் இருந்தவைகளில் ஒன்று, **மோசேயின் பிரமாணங்களடங்கிய பலகைகள்**. அப்படியானால், இதன் பொருள், **நீங்கள் பரிசுத்தம் பண்ணப்படப் பின்பற்றவேண்டியது மோசேயின் பிரமாணம் என்பது தானே**. அது சரி, அப்படியானால், நம்முடைய நாளில் பின்பற்றப்படவேண்டியது எது? இது குறித்து, புதிய ஏற்பாட்டிலுள்ள யோவான் 17:17 என்ன சொல்லுகிறது? **உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும். உம்முடைய வசனமே சத்தியம் என்று.** இயேசு கிறிஸ்துவைக் கொண்டு, தேவன் கொடுத்த **புதிய ஏற்பாட்டு சத்தியமே** இன்று ஒருவனைப் பரிசுத்தமாக்கும்.

ஆகவே, அருமையானவர்களே, நம்முடைய ஆன்மீக வாழ்க்கை கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படி பரிசுத்தம் செய்யப்படுவது அவசியம். இதில் எந்த சந்தேகத்திற்கும் இடமில்லை. விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது எப்படிக் கூடாத காரியமோ (எபி. 11:6) அதுபோல, பரிசுத்தமில்லாமலும் தேவனுக்குப் பிரியமாயிருப்பது இயலாத காரியம் (எபி. 12:14) ஆக, தேவனைப் பிரியப்படுத்த விரும்பும் ஒருவனுக்குப் பரிசுத்தம் மிக அவசியம். ஆனால், அது எப்படி சாத்தியம்? புதிய ஏற்பாட்டில், கிறிஸ்தவர்கள் **பரிசுத்தவான்கள்** என்றும், **பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்கள்** என்றும் எழுதப்பட்டுள்ளது (1 கொரி 1:2).

ஆக, பரிசுத்தமுள்ளவர்களாயிருப்பதும், சத்தியத்தின்படி கிறிஸ்தவர்களாக இருப்பதும் ஒன்று. அப்படியானால், ஒருவன் கிறிஸ்தவனாக மாறுவதற்கான தகுதி எதுவோ, அதுதான் பரிசுத்தமுள்ளவனாவதற்கும் தேவையான தகுதி. ஒருவன் கிறிஸ்தவனாவதற்கு என்ன செய்ய வேண்டுமென்று புதிய ஏற்பாடு தெளிவாகச் சொல்லுகிறது? முதலாவது, ஒருவன் கேள்விப்பட வேண்டும் (ரோம 10:17), பிறகு விசுவாசிக்க வேண்டும் (மாற். 16:16) மனந்திரும்ப வேண்டும் (அப். 2:38) அறிக்கையிடவேண்டும் (அப். 8:37) பாவமன்னிப்புக்காகத் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற வேண்டும் (அப். 22:16) இவைகளைச் செய்வதன் மூலம் **ஒருவன் இரட்சிப்படைகிறான். அதாவது, பரிசுத்தமாகிறான்.** அப்படியானால், இந்த உபதேசத்தின்படி நீங்கள் பரிசுத்தமாகிவிட்டீர்களா?

அன்பானவர்களே, உங்களை இவ்வருடமெல்லாம் காத்து வழிநடத்தின தேவன், ஆண்டின் இறுதியில், நீங்கள் பரிசுத்தமாகுங்கள் என்று கட்டளையிடும்போது, இவைகளனைத்தையும் செய்ய வேண்டுமென்றே கூறுகிறார். இப்படிச் செய்வது அவருக்காக அல்ல, உங்களுடைய புதிய ஆண்டு ஆசீர்வாதமாக, சமாதானமாக இருக்க வேண்டுமென்பதற் காகத்தான். இதைச் செய்வதின் மூலம் புதிய ஆண்டில் மாத்திரமல்ல, நித்திய காலத்திலும் மகிழ்ச்சியாயிருக்கும்படியான வழியைப் பெற்றுக் கொள்ளுங்கள். ஆமென்.

S. ராஜநாயகம்



## புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

**அனைவருக்கும் அடியேனின் குடும்பத்தின் சார்பாகவும், அடியேனோடு இணைந்து தேவப் பணியாற்றும் ஒவ்வொருவரின் சார்பாகவும் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.**

# உண்மையும், நன்மையும்

1. கிறிஸ்து நம்மை நேசிப்பது உண்மை
இதனை யோசித்தால் நன்மை!

2. கிறிஸ்து ஆதியிலே இருந்தாரென்பது உண்மை
இதனை நம்பினால் நன்மை!

3. கிறிஸ்து உலகிற்கு வந்தாரென்பது உண்மை
இவருக்குள் வாழ்ந்தால் நன்மை!

4. கிறிஸ்து உலகில் போதித்தது உண்மை
இதனை கேட்டால் நன்மை!

5. கிறிஸ்து இயேசு சிலுவையில் மரித்தது உண்மை
இதனை விசுவாசித்தால் நன்மை!

6. கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்பது உண்மை
இதனை அறிவித்தால் நன்மை!

7. கிறிஸ்து சபையைக் கட்டினது உண்மை
அதற்குள் இருந்தால் நன்மை!

8. கிறிஸ்துவின் சபைதான் உண்மை
இதனை ஏற்றுக்கொண்டால் நன்மை!

**சகோ. அன்புராஜ்**, குளித்தலை.

# நியாயத்தீர்ப்பு நாள் உண்டென்று நாம் ஏன் நம்புகிறோம்?

நியாயத்தீர்ப்பு நாள் உண்டென்று வேதாகமம் மிகத் தெளிவாக கூறுகிறது. அப்படியானால், நாம் இந்த வாழ்க்கையில், சொன்னவைகளுக்கும், செய்தவைகளுக்கும் கணக்கொப்புவிக்க வேண்டும் என்று பொருள். அநேகருக்கு தாங்கள் செய்பவைகளை மற்றொருவரிடம் கணக்கொப்புவிக்க வேண்டும் என்ற எண்ணமே பிடிப்பதில்லை. தாங்கள் தவறு செய்யும் போது காவல் துறைக்கும், தாங்கள் வரி செலுத்தாத போது அரசாங்கத்திற்கும் பதில் சொல்ல வேண்டுமென்பது அநேகர் விரும்பாத ஒரு காரியமாக இருக்கிறது. அநேகர் அதை விரும்பவில்லை என்றாலும், இவ்வாழ்க்கையில் அது உண்மை என்பதை யாரும் மறுக்க முடியாது. தங்கள் ஜீவனத்திற்காக சம்பாதிப்பவர்கள் தங்கள் முதலாளிக்கு கணக்கொப்புவிக்க வேண்டும்; பள்ளிக்கோ, கல்லூரிக்கோ போகும் ஒருவன் தேர்வுகளை சந்தித்தாக வேண்டும்; ராணுவத்திலே பணியாற்றும் ஒருவன் தன் மேல் அதிகாரியின் கட்டளைக்கு கீழ்ப்படிய வேண்டும். அப்படியே, நாம் எல்லாரும், எத்துறையில் இருந்தாலும் கணக்கொப்புவிக்க வேண்டும். இந்த பொறுப்பிலிருந்து ஒருவன் தப்பிக்க வேண்டுமானால் அவன் முதலாளியாக, ஐசுவரியவானாக அல்லது மரித்தவனாக இருக்க வேண்டும். ஆனால், ஐசுவரியவானும், தேசத்தின் அதிகாரிகளும், ஜீவனுள்ளோரும், மரித்தோரும் நியாயத்தீர்ப்பு நாளில் தேவனிடம் கணக்கொப்புவிக்கும்படி வந்து நின்றாக வேண்டும்.

எபிரெய ஆசிரியர் சொல்லும்போது, "அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப் பட்டிருக்கிறபடியே" (எபி. 9:27) என்கிறார். யாரெல்லாம் அந்த நியாயத்தீர்ப்பு நாளில் கணக்கொப்புவிக்க வேண்டும், பவுல் சொல்லுவதை கேளுங்கள், "ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, **நாமெல்லாரும்** கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்" என்கிறார் (II கொரி. 5:10), அந்நாளில் எல்லாரும், நீதியுள்ள நியாயதிபதியாகிய கிறிஸ்துவுக்கு முன் வரவேண்டும், அப்பொழுது, அவனவன் தன் தன் சரீரத்தில் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடைவான் என்பதை நாம் காண்கிறோம்.

பவுல் ரோமக் கிறிஸ்தவர்களுக்கு எழுதுகையில், "நம்மில் ஒருவனும் தனக்கென்று பிழைக்கிறதுமில்லை, ஒருவனும் தனக்கென்று மரிக்கிறது மில்லை. ஆகையால் பிழைத்தாலும், மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்

களாயிருக்கிறோம். கிறிஸ்துவும் மரித்தோர் மேலும் ஜீவனுள்ளோர் மேலும் ஆண்டவராயிருக்கும் பொருட்டு, மரித்தும் எழுந்தும் பிழைத்துமிருக்கிறார். இப்படியிருக்க, நீ உன் சகோதரனைக் குற்றவாளியென்று தீர்க்கிறதென்ன? நீ உன் சகோதரனை அற்பமாய் எண்ணுகிறதென்ன? நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே. அந்தப்படி; முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவுகள் யாவும் தேவனை அறிக்கைபண்ணும் என்று என் ஜீவனைக் கொண்டு உரைக்கிறேன் என்பதாய்க் கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது. ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான் என்கிறார். (ரோமர். 14:7-12).

அத்தேனே பட்டணத்து மக்களிடம் பவுல் பேசும்போது, "அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார். அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார். அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார் என்றான்" (அப். 17:30,31) இந்த உலகத்தை நீதியாக நியாயந்தீர்க்கும்படியான ஒரு நாளை தேவன் நியமித்திருக்கிறார் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அன்று தேவன் எல்லாரையும் நியாயந்தீர்ப்பார், அந்த தீர்ப்பு நீதியாயிருக்கும். அந்த தீர்ப்பு நியாயத்தின்படியாயிருக்கும், யாருக்கும் பட்சபாதமிராது, ஒருவனுக்கு ஒருவிதமாகவும் மற்றவனுக்கு வேறுவிதமாகவுமிராது. அந்த நாள் என்றென்பது நமக்குத் தெரியாது, ஆனால், அதை தேவன் அறிவார். கர்த்தருடைய வருகையும் அப்படியே, நம்முடைய ஆண்டவர் சொல்லும்போது, என் பிதா ஒருவர் தவிர அதை வேறொருவரும் அறியார்கள், பரலோகத்தின் தூதரும் அறியார்கள் என்கிறார். பிதா ஒருவருக்கு மாத்திரமே தெரியும், தேவ தூதருக்கும் தெரியாது, பின்னே எப்படி மனிதர்களுக்குத் தெரியும்? கிறிஸ்து எப்பொழுது வருவார், நியாயத்தீர்ப்பு எப்பொழுது நடக்கும் என்பது பற்றி மனிதனுக்கு நிச்சயமாகத் தெரியாது. அத்தோடு, தேவன், தான் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூமியை நீதியாக நியாயந்தீர்ப்பார், அந்த மனிதனை மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பினதால், அதன் நிச்சயத்தை நமக்கு காண்பித்திருக்கிறார். அந்த மனிதன் நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துதான்.

பவுல், பேலிக்ஸ்சுக்கு முன்பு நின்று பிரசங்கித்தான் என்று நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. பேலிக்ஸ்சும், துருசில்லாளும் விபச்சாரத்திலே வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது பவுல், "...நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில், பேலிக்ஸ், பயமடைந்து; இப்பொழுது நீ போகலாம், எனக்கு

சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன் என்றான்" (அப். 24:25) பேலிக்ஸ் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தான் என்பதை அறிந்த பவுல், அவன் பாவத்தை கண்டித்து உணர்த்தும் அளவுக்கு தைரியம் கொண்டவனாக இருந்தான். அவன் செய்யும் காரியத்தின் விளைவையும், அதற்காக அவன் தேவனுக்கு கணக்கொப்புவிக்க வேண்டுமென்றும் அவன் பேலிக்ஸ்சுக்கு எடுத்துரைத்தான். பேலிக்ஸ் பயமடைந்ததில் என்ன ஆச்சரியமிருந்திருக்கிறது. அவன் நடுங்கியிருக்கிறான். ஆனால், அவன் பவுல் சொல்லுவதைக் கேளாமல், எனக்குச் சரியான சமயம் வாய்க்கும்போது உன்னை அழைத்தனுப்புகிறேன் என்ற வாக்கு கொடுத்துவிட்டு அவனை அனுப்பிவிட்டான். நமக்குத் தெரிந்தவரை அவன் பவுலை அழைக்கவில்லை, ஆகவே, அந்நிலையிலேயே அவன் மரித்துவிட்டான். என்ன ஒரு பரிதாபமான நிலை பாருங்கள்.

தன் நாளில் வாழ்ந்த மதத் தலைவர்களைப் பார்த்து இயேசுவானவர் பேசும்போது, "விரியன் பாம்புக் குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர் களாயிருக்க, நலமானவைகளை எப்படிப் பேசுவீர்கள்? இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திருலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான். மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார்" (மத்தேயு 12:34-37) அப்படியானால், ஒருவன் என்ன செய்கிறான் என்பதில் மாத்திரம் கவனமாயிராமல், நாம் ஒவ்வொருவரும் என்ன சிந்திக்கிறோம், என்ன பேசுகிறோம் என்பதைக் குறித்தும் நாம் கவனமாயிருக்க வேண்டும். நாம் இதை அறியும் போதே நாம் என்ன சிந்திக்கிறோம், பேசுகிறோம் என்பதைக் குறித்து யோசித்துச் செயல்பட தூண்ட வேண்டும்.

மனுஷருடைய அந்தரங்கங்களைக் குறித்து இயேசு கிறிஸ்துவைக் கொண்டு தேவன், நியாயத்தீர்ப்பு கொடுக்கும் நாள் ஒன்று வருமென்று அப்போஸ்தலன் பவுல் கூறுகிறார் (ரோமர் 2:16). எபிரெய ஆசிரியர் கூறும்போது, "தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும், ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை, சகலமும்

அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது. அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்கிறார்" (எபி. 4:12,13) மேலும் பவுல் சொல்லுகையில், "ஆயினும் நான் உங்களாலேயாவது மனுஷருடைய நியாயநாளின் விசாரணையினாலேயாவது தீர்ப்பைப் பெறுவது எனக்கு மிகவும் அற்ப காரியமாயிருக்கிறது; நானும் என்னைக் குறித்துத் தீர்ப்புச் சொல்லுகிறதில்லை. என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் அறியேன்; ஆகிலும் தீர்ப்புச் சொல்லுகிறதில்லை. என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் அறியேன்; ஆகிலும் அதினாலே நான் நீதிமானாகிறதில்லை; என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே ஆனதால், கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச் சொல்லாதிருங்கள்; இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்; அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும்". (1கொரி. 4:3-5).

பவுல் மீண்டும் கூறுகையில், "நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது என்கிறார்". (IIதீமோ. 4:1) பவுல் தொடர்ந்து தன்னைப் பற்றி சொல்லும்போது, "இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்". (IIதீமோத். 4:8). பவுல், ஆண்டவரை நீதியுள்ள நியாயாதிபதி என்று சொல்லுவதையும், அவர் தனக்கு அந்நாளிலே அதாவது நியாயத்தீர்ப்பு நாளிலே நீதியுள்ள கிரீடத்தை தருவார் என்று சொல்லுவதையும் கவனியுங்கள். அந்நாளில் அவருக்கு மாத்திரமல்ல, நம்முடைய ஆண்டவரின் வருகைக்கு ஆயத்தமாயிருக்கிற யாவருக்கும் அப்படி தந்தருளுவார் எனக் காண்கிறோம்.

எபிரெய ஆசிரியர், எல்லாருக்கும் தேவன் நியாயாதிபதியாக இருக்கிறார் என்று கூறுகிறார் (எபி. 12:23) அதன்பின்பு எபிரெயர் 13:4ல் அவர் கூறும்போது, "விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக, வேசிக்கள்ளரையும் விபச்சாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்" என்கிறார்.

மத்தேயு 25ம் அதிகாரத்தில் கிறிஸ்து சொல்லும்போது, "அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். அப்பொழுது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களை அவர் பிரித்து,

செம்மறியாடுகளைத் தமது வலதுபக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார்" என்றார். (மத்தேயு. 25:31-33). ஒரு நாளில் நியாயத்தீர்ப்பு நடக்குமென்று நமது ஆண்டவர் இங்கு நமக்கு எடுத்துரைக்கிறார். அது அவருடைய வருகையில் நடக்கும் அப்பொழுது எல்லா ஜனங்களும், பாஷைக்காரரும் அவரிடமாக கூடி வருவார்கள். ஒரு மேய்ப்பன் செம்மறியாடுகளையும், வெள்ளாடுகளையும் பிரிப்பது போல இயேசுவும் நல்லோரையும், தீயோரையும் பிரிப்பார். வலதுபக்கத்தில் நிற்கிற செம்மறியாடுகள், நீதிமான்களாக, கிறிஸ்த்வர்களாக அதாவது சபையாக இருக்கிறார்கள். இடது பக்கத்தில் உள்ள வெள்ளாடுகள் துன்மார்கள், வஞ்சிக்கப்பட்டவர்கள், அவிசுவாசமுள்ள கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள். நியாயத்தீர்ப்பு நடந்த பின், வசனம் சொல்லுகிறது, "அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும் நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்". (மத்தேயு. 25:46).

**நாம் இதுவரை பார்த்தவைகளை சுருக்கமாக பார்ப்போம் வாருங்கள்:-**

1. தேவனுடைய நியாயத்தீர்ப்பு ஒரு நாளில் நடக்கும். அது நமது மரணத்திற்குப் பின், அல்லது இயேசு கிறிஸ்துவின் வருகையின்போது.

2. அந்த மகா நாளில் எல்லாரும் வந்து கலந்துகொள்வார்கள். இதுவரையில் வாழ்ந்த இனி வாழப்போகிற அனைவரும் அந்த மகாநாளில் வந்து சேருவார்கள். ஒருவனும் தன்னை ஒளித்துக்கொள்ளவோ அல்லது தப்பித்துக்கொள்ளவோ முடியாது. யாரையும் தேவன் கண்டுகொள்ளாமல் இருக்கமாட்டார். அந்நாளில் வாலிபர், வயோதிகர், நல்லோர், தீயோர், ஐசுவரியவான், தரித்திரன், அரசன், வேலைக்காரன் அனைவரும் கலந்து கொள்ளுவார்கள்.

3. தேவன், தனது குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக அந்நாளில் நியாயந்தீர்ப்பார்.

4. அது பட்சாதாபமில்லாத நியாயத்தீர்ப்பாயிருக்கும். அவனவனுடைய கிரியைகள் நல்லதாக இருந்தாலும், கெட்டதாக இருந்தாலும் அதன்படியாக நியாயந்தீர்க்கப்படுவான்.

5. வீணான வார்த்தைகள், ஒவ்வொரு செயல்கள், ஒவ்வொரு ரகசிய எண்ணங்கள் அனைத்தும் அந்நாளில் நியாயந்தீர்க்கப்படும்.

6. அது இறுதியான நியாயத்தீர்ப்பு, இரண்டாவது வாய்ப்புக்கு இடமில்லை. அது நீதியான நியாயத்தீர்ப்பாக இருக்கும்.

7. அந்நாளில் நீதிமான்கள் நித்திய ஜீவனுக்கும், துன்மார்க்கரோ பிசாசின் நரகத்தில் நித்திய ஆக்கினையையும் அடைவார்கள்.

நியாயத்தீர்ப்பில் கர்த்தரை சந்திக்க ஆயத்தமா? "... என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிற தொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்" என்று கிறிஸ்து சொன்னது நினைவில் இருக்கட்டும். மேலும்

கிறிஸ்து சொல்லுகையில், "மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், பிதாவானவர் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கிறது போல, குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள்செய்திருக்கிறார். அவர் மனுஷ குமாரனாயிருக்கிறபடியால், நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார். இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும்; தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள். நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை; நான் கேட்கிறபடியே நியாயந் தீர்க்கிறேன்; எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது. (யோவான். 5:25-30).

என் நண்பர்களே, நீங்கள் இயேசுவை விசுவாசித்து, பாவத்திலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவின் மீதுள்ள உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, பாவ மன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற்று அந்த மகா நியாயத்தீர்ப்பு நாளுக்கென்று நீங்கள் ஆயத்தமாகலாம். அப்படி நீங்கள் செய்தால், அவர் உங்களை தமது சபையில் சேர்ப்பார். அதில் நீங்கள் முடிவு பரியந்தம் நிலைத்து நின்றால், ஒருநாளில் அவருக்கு முன் நீங்கள் நியாயத்தீர்ப்பு நாளில் நிற்கும்போது, "...நல்லது, உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய்.... உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்பார் (மத்தேயு. 25:23) அது எத்தனை இன்பமாய் இருக்கும். அந்த நாளுக்காக இப்பொழுதே ஆயத்தமாகுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**J.C. CHOATE** **J.C. சோட்**

## கடலில் நீரூற்று

**யோபு**விடம் தேவன் இப்படிக் கேட்கிறார். "Hast thou entered into the springs of the sea?" (யோ. 38:16 a) **உண்மையாகவே கடலுக்கடியில் நீரூற்று உண்டா? ஆம் இருக்கிறது! இதை முதன் முதலில் கண்டுபிடித்தவர் ரோமப் புவியியலாளர், ஸ்ட்ராபோ** (Strabo) (63BC - AD 21) **என்பவர். 1976ல் அமெரிக்க பூமியியல் ஆராய்ச்சியாளர்கள் அட்லாண்டிக் கடலோரத்தில் நியூ இங்கிலாந்திலிருந்து– ஜார்ஜியா வரை நல்ல தண்ணீர் உள்ளதாகக் கண்டுபிடித்துள்ளனர். இந்த இரகசியங்களெல்லாம் யோபுவுக்கு எப்படித் தெரிந்தது?**

பெண்கள் பகுதி

# "தச்சனின் மனைவி"

ஆபிரகாம் மனைவி சாராளை எடுத்துக் கொண்டால், தன் வாழ்நாள் பரியந்தம் ஓர் இளவரசியைப் போன்று இருந்தாள். ஆபிரகாம் செல்வச் சீமானாய் வாழ்ந்தான். சாராளுக்கு வேலைக்காரரும், கால்நடைச் செல்வங்களும் இன்னும் அவள் மனம் விரும்பிய யாவும் கிடைத்தன.

மரியாள் கூட ராஜ பரம்பரையான தாவீதின் வம்சத்தைச் சேர்ந்தவள் என்பதை தவிர குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வேறு முக்கியத்துவம் அற்றவளாகவே இருந்தாள். மரியாள் ஒரு கன்னிப்பெண். அன்றைய நாட்களில் பல யூதப் பெண்கள் இருந்திருந்தாலும், மேசியாவின் வருகைக்கான நேரம் வந்தபோது இவளே சரியான கன்னிகையென தேர்ந்தெடுக்கப்பட்டாள். "**இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்**" (ஏசா. 7:14) என்ற தீர்க்கதரிசனம் நிறைவேறும்படி மரியாள் தேர்ந்தெடுக்கப்பட்டாள் என்பதை லூக்கா எழுதின நற்செய்தி நூல் முதலாம் அதிகாரம் 26 துவங்கி 33 முடிய உள்ள வசனப்பகுதியில் நாம் வாசித்து அறிந்து கொள்ளலாம். காபிரியேல் தூதனின் வார்த்தைகளை கேட்ட மரியாளின் பதிலாக "**இது எப்படி ஆகும்? புருஷனை அறியேனே என்பதும், இதோ நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது**" என்று வந்தது.

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! இந்த 2005-ம் வருடத்தின் இறுதியில் நின்று கொண்டிருக்கும் ஸ்திரீகளாகிய நமக்கு தச்சனின் மனைவியாகிய மரியாள் என்ன பாடம் கற்றுக் கொடுக்கப்போகிறாள் என்று பார்ப்போம். அருமையானவர்களே! பழக்கத்துக்கும், வழக்கத்துக்கும் மாறான ஒரு செய்தியை தூதன் இவளிடம் கூறுகிறான். இதை ஏற்றுக்கொள்வதென்பது சாதாரண விஷயமா? கன்னிகையின் கர்ப்பம். யார் இதை ஏற்றுக் கொள்வார்கள்? மரியாள் இதை எப்படி வெளியே சொல்லுவாள்? தன் பெற்றோரிடம் என்ன கூறுவாள்? சமுதாயம் இவளை எப்படிப் பார்க்கும்? உறவுகளின் பிரதிபலிப்பு எப்படி இருக்கும்? சரி எல்லாவற்றையும் சமாளித்தாலும் இவள் உள்ளம் இதை எந்த வகையில்

ஏற்றுக்கொள்ளும்? என்ன பாடுபட்டாளோ பாவம் மரியாள். என்ன செய்வதென்பதை புரிய பெலனற்ற மரியாள் "**இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை**" என்பதைத் தவிர வேறு சரியான பேச்சு எதுமே தெரியாத மரியாள் தேவ சித்தத்தை அப்படியே ஒத்துக் கொண்டாள். யாருமே இதுவரை அனுபவித்திராத ஓர் புது அனுபம் இது. தூதனின் வார்த்தைகளில் கலங்கிப்போய் மாற்று யோசனை சொல்லத் தெரியாதவளாய் இருந்தாள் மரியாள். பொதுவாக இந்தச் சூழ்நிலையில் ஒரு கன்னிப்பெண் என்ன செய்திருப்பாள்? தூதனிடம் வாக்கு வாதம் செய்திருப்பாள். முதலில் என் அம்மாவிடம் இதைப் பற்றி பேசவேண்டும் என்பாள். யோசேப்பு என்ற மனிதன் என்ன சொல்வான்? தூதனின் பேச்சையும், என் பேச்சையும் அவன் ஏற்றுக் கொள்ளமாட்டானே என்போம். சம்பந்தப்பட்டவர்களோடெல்லாம் ஆலோசனை செய்து விட்டு பிறகு வந்து சொல்லுகிறேன் என்போம். ஆனால், மரியாள் இதில் எந்த வகையாகவும் செயல்படவில்லை.

மாறாக தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட இந்த ஸ்திரீ என்ன செய்தாள்? "**அந்நாட்களில் மரியாள் எழுந்து மலை நாட்டிலே யூதாவிலுள்ள ஒரு பட்டணத்திற்கு தீவிரமாய் போய், சகரியாவின் வீட்டுக்குள் பிரவேசித்து, எலிசபெத்தை வாழ்த்தினாள்**" (லூக். 1:39,40). மரியாள் ஏன் எலிசபெத் வீட்டிற்குச் சென்றாள்? எலிசபெத்தால் மட்டுமே இந்த அதிசயத்தை புரிந்து கொள்ள முடியும். ஏனென்றால் எலிசபத்தும் வயது சென்ற காலத்திலே கர்ப்பந்தரித்திருந்தாள் (லூக். 1:7,24) தனக்கே காலங்கடந்து கர்ப்பம் உண்டாயிருக்கும் போது கன்னிகை கர்ப்பவதியாவது சாத்தியம் என்பதை இவளால் மட்டுமே புரிந்து கொள்ளமுடியும்.

இங்கே மரியாளின் ஞானமான செயலை நாம் கவனித்தாக வேண்டும். சரியான இடத்திற்குச் செல்கிறாள். இங்கேதான் நாம் தவறு செய்துவிடுகிறோம். என்ன செய்வது? இந்த பிரச்சனையை எவ்வாறு கையாளுவது? என்ற கேள்வி வரும்போது நாம் கர்த்தருடைய பிள்ளைகளிடத்தில் போவதில்லை. உறவுகள், இனத்தார், செல்வந்தர்கள், செல்வாக்குள்ளவர்கள் என்று இவர்களை நாடி செல்வதினால் முற்றிலும் தேவ விரோத செயல்கள் நடைபெற காரணமாகிவிடுகிறோம். தேவ சித்தத்திற்கு நம்மை ஒப்புக் கொடுக்காமல் உலகத்தை நாடி மக்களோடு மக்களாக சென்றுவிடுகிறோம். கிறிஸ்தவர்களாகிய நாம் உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவர்கள் என்பதை மறந்துவிடுகிறோம். எனவே விசுவாசம் கிரியையில்லாமல் போய் விடுகிறது. இங்கே மரியாள் எலிசபெத்திடம் செல்கிறாள். மரியாளின் இருதயத்தை அறிந்த அன்பே உருவான நம் தேவன் எலிசபெத்தின் வாயில் என்ன வார்த்தைகளை வைக்கிறார்? "**என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் வந்தது எனக்கு எதினால் கிடைத்தது**" **லூக்கா. 1:43** நம்பவும், ஏற்றுக்கொள்ளவும் முடியாமல் தவித்துக் கொண்டிருந்த மரியாளுக்கு இந்த வார்த்தை எவ்வளவு நம்பிக்கையையும் ஆறுதலையும் கொடுத்திருக்கும்! நம் தேவன் எவ்வளவு நல்லவர் பாருங்கள். அவர் எப்போதும் நம்மை ஊக்கப்படுத்தும்

சூழ்நிலைகளையே அமைத்துக் கொடுக்கிறார். பல சமயங்களில் நாம் தான் திசைமாறி சென்று பிரச்சினையில் சிக்குவதோடு, தேவ சித்தத்திற்கும், வேத வசனங்களுக்கும் விரோதமாக செயல்பட்டு விடுகிறோம். மரியாளைப் போல தேவனுடைய பிள்ளைகளோடு சாவகாசம் வைப்போம்.

அதன் பிறகு நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து பெத்லேகேமிலே பிறந்து வளர்ந்தது பிறகு ஊழியம் செய்தது நாம் அனைவரும் அறிந்த ஒன்று. இந்தக் கால கட்டங்களில் மரியாளுக்கும் இயேசுவுக்கும் இடையே நடைபெற்ற சந்திப்புகளில் மரியாள் எவ்வாறு நடந்து கொண்டாள் என்று பார்ப்போம். இயேசுவுக்கு 12 வயதானபோது யோசேப்பும், மரியாளும் அவரைக்கூட்டிக்கொண்டு எருசலேமுக்கு போனார்கள். திரும்பி வரும்போது பிள்ளையாகிய இயேசு எருசலேமிலே இருந்து விட்டார். இது மரியாளுக்கு தெரியாது. அவரைக் காணோம் என்றவுடனே தேடிக் கொண்டு சென்று தேவாலயத்தில் அவரைக் கண்டு, "**மகனே! ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்? இதோ, உன் தகப்பனும், நானும் விசனத்தோடே உன்னைத் தேடினோமே என்றாள்**".

மீண்டுமாக கானா ஊர் கலியானத்தில் திராட்சை ரசம் குறைவுபட்டபோது மரியாள் இயேசுவுக்கு அறிவிக்கிறாள். அதற்கு இயேசு, "ஸ்தீரியே, **எனக்கும் உனக்கும் என்ன, என் வேளை இன்னும் வரவில்லை**" என்கிறார். அவர் தேவனுடைய குமாரன் என்பதை நன்கு அறிந்தவள்தானே மரியாள். எனவே மறுத்தரம் சொல்லாமல், கோபமும் அடையாமல் சீஷர்களிடம், "**அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள் என்றாள்**" (யோவான் 2:5).

மூன்றாவதாக, ஒரு முறை மரியாளும், இயேசுவின் சகோதரரும் அவரிடத்தில் பேச நின்றபோது சீஷர்கள் இயேசுவுக்கு இதை அறிவிக்கிறார்கள். அதற்கு இயேசு பதிலாக, "**பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ அவனே எனக்குச் சகோதரனும், சகோதரியும் தாயுமாய் இருக்கிறார்கள் என்றார்**". (மத். 12:49,50).

## பூமி அழியுமா?

*இந்தப் பூமியானது அழிந்து போகக் கூடியது என்று வேதாகமம் மூன்று இடங்களில் சொல்கிறது. (ஏசா. 51:6, சங். 102:26, எபி. 1:11) அதைத்தான், தெர்மோ டைனமிக்ஸ்-ன் இரண்டாம் விதி கூறுகிறது. இந்த விதி எல்லாமே ஒரு காலத்தில் முடிவுக்கு வரக் கூடியது எனக்கூறுகிறது. சக்தியானது குறைந்து குறைந்து போகும். அப்படி தொடர்ந்து குறைந்து போகும்போது உலகமானது முடியும். உபயோகத்திற்கு சக்தி இல்லையென்ற ஒரு நிலை வரும். இது எப்படி வேதாகம எழுத்தாளர்களுக்குத் தெரியும்?*

நான்காவது, கடைசியுமாக மரியாளை நாம் கல்வாரி சிலுவைக்கு முன் காணலாம். பெத்லகேமிலே சிசுவாக பிறந்த அந்த குழந்தை இப்போது சிலுவையிலே உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கின்ற தேவ ஆட்டுக்குட்டியாக தொங்குவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறது அதைப் பெற்ற மனம். இயேசு சொல்லொன்னா பாடுகளையும், வேதனையையும் வலியையும் சகித்துக் கொண்டிருக்கிறார். இயேசு தன் தகப்பனாகிய தேவனைப் போல பரிசுத்தராயிருந்தார், தன் தாயாகிய மரியாளைப்போல மனுஷீகத்தை உணரக்கூடியவராயுமிருந்தார். இயேசு தன் மரணத்தைப் பற்றி நன்றாகவே அறிந்திருந்தார். ஏசாயா தீர்க்கன் 700 ஆண்டுகளுக்கு முன்பே இயேசுவின் மரணத்தை சித்திரம் தீட்டியிருந்தார். (ஏசாயா. 53)

சிலுவையின் முன் நின்று துடி துடித்துக் கொண்டிருந்த மரியாள். இயேசு பிறந்த எட்டாம் நாளிலே விருத்தசேதனம் பண்ண தேவாலயத்திற்கு கொண்டு போனபோது சிமியோன் சொன்ன, "**உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும்**" என்ற வார்த்தையை நினைவு கூர்ந்து சிந்தித்துக் கொண்டிருந்திருப்பாள். மரியாளுக்கு உண்டான குணம் என்னவென்றால், **எல்லாக் காரியங்களையும் தன் இருதயத்திற்குள் போட்டுக் கொண்டு சிந்தித்துக் கொண்டிருப்பது**. பெண்களாக நமக்கு இந்தப் பண்பு மிகவும் அவசியமானது. லூக்கா 2:19, 2:51 ஆகிய வசனங்கள் இதை நமக்கு காட்டுகிறது. "**மரியாளோ இந்த சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்திலே வைத்து சிந்தித்துக் கொண்டிருந்தாள்**".

சகல வல்லமையும், அதிகாரமும் நிறைந்த என் மகன் இவ்வாறு பாடுபட்டுக் கொண்டிருக்கிறானே, மகனே உன் வல்லமையினால் இக்கொடியவர்களை பழிக்குப்பழி வாங்கிவிடு என்று மரியாள் சொல்லவில்லை. நம்மில் பெரும்பாலோர் அப்படிச் செய்ய தூண்டி விடுவோம். தாகத்தினால் தண்ணீருக்காக இயேசு கெஞ்சியபோது கசப்புக் கலந்த காடியைக் கொடுத்தார்கள். தண்ணீரை திராட்சை ரசமாக மாற்றிய தன் மகனுக்கு இவ்வாறு செய்யப்படுகிறேதே என்பதை நினைவு கூர்ந்து மரியாள் அழுதிருப்பாள் அத்தனை பாடுகளிலுக்கு மத்தியிலும் சிலுவையில் தொங்கிக் கொண்டு தன் தாயையும், சீஷனாகிய யோவானையும் பார்த்து, "**ஸ்தீரியே அதோ உன் மகன்**" "**சீஷனே அதோ உன் தாய்**" என்றும் இயேசு கூறினார். (யோவா :19:26,27) இந்த இடத்தில் தாய் என்று சொல்லுவதற்கு பதிலாக ஸ்தீரி என்று சொல்லுகிறார். அவரால் அம்மா என்று கூப்பிட முடியவில்ல. ஏற்கனவே துயரமும், துக்கமும் நிறைந்து நின்று கொண்டிருக்கும் மரியாளைப் பார்த்து அம்மா என்று சொன்னால், அது அவளுடைய இருதயமே கிழியும் அளவு நிலைமை போய்விடும் என்ற கருதி அம்மா என்று சொல்லாமல் ஸ்தீரி என்று சொல்லிவிட்டார். ஆனால், உடனே யோவானைப் பார்த்து, அதோ உன் தாய் என்கிறார். யோவானே என் தாயை ஒரு பெண்ணைப் போல் நடத்தி விடாதே அவள் உனக்கு தாயைப் போன்றவள் என்று தாய்க்கு பொறுப்பாக ஒரு ஆளை நியமிக்கிறார் கடமையை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் நமதாண்டவர் இயேசு கிறிஸ்து. "**அந்தேர முதல் அந்தச் சீஷன் அவளைத் தன்னிடமாய் ஏற்றுக்கொண்டான்**". (யே : 19:27.

உலகம் உண்டானது முதல் இதுவரை எங்குமே நடக்காத அதிசயமான உயிர்த்தெழுதலை அடைந்த இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகும் கடைசியாக மரியாளை நாம் ஓர் இடத்தில் பார்க்கிறோம். "**அங்கே இவர்களெல்லாரும், ஸ்திரீகளோடும் இயேசுவின் தாயாகிய மரியாளோடும் அவருடைய சகோதரரோடுங்கூட ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்**" (அப். 1:14).

பிரியமானவர்களே! காபிரியேல் தேவ தூதனால் சொல்லப்பட்ட வார்த்தைகளுக்கு தன்னை முற்றியும் ஒப்புக் கொடுத்து, தான் பெற்ற மகனாயிருந்தாலும் அவர் தேவ குமாரன் என்பதினால் அவர் சொல்லுகிறதெற்கெல்லாம் பதில் வார்த்தை சொல்லாமல் தன் மகனின் சித்தத்திற்கு தன்னை ஒப்புக்கொடுத்தாள் மரியாள். இயேசு கிறிஸ்து பிதாவின் **சித்தத்தை எல்லா சமயத்திலும் நிறைவேற்றுவதற்கு மரியாள் மிகவும் பெருந்துணையாய்** இருந்திருக்கிறாள் என்பதைப் பார்க்கும்போது நமக்கெல்லாம் இது பாடமாக இருக்கிறது. நம் கணவனோ, நம் பிள்ளைகளோ தேவ சித்தம் செய்ய தங்களை ஒப்புக்கொடுக்கும் போது எத்தனை தாய்மார்கள் இன்றைக்கு அதற்கு எதிர்ப்பு தெரிவித்து, தங்கள் சொந்த கருத்தை திணித்து, தடைக் கற்கலாயிருந்து யாரையும் பரலோகம் செல்ல முடியாமல் தடுத்து விடுகின்றனர்! என்றைக்கு இயேசு மரியாளின் வயிற்றில் உற்பத்தியானாரோ அன்று முதல் அவரின் மரணம் வரை எல்லா கட்டத்திலும் தன்சொந்த விருப்பத்தை வெளிக்காட்டாமல் மகனே உன் பிதாவின் சித்தப்படியே செய் என்று ஒப்புக் கொடுத்த மரியாளின் இருதயத்தை நாம் பெற்றுக்கொள்வோம். தேவன் மரியாளை தெரிந்து கொண்டு அவருக்கு கொடுத்த பொறுப்பில் இறுதிவரை தவறு செய்யாமல் சரியாகச் செய்து முடித்தாள்.

பிரியமானவர்களே! இன்றைக்கு கிறிஸ்தவ உலகத்தில் பெரும்பாலானோர் மரியாளை தெய்வமாக நினைத்து வழிபட்டுக் கொண்டிருக்கின்றனர். அது மகா தவறு. மரியாள் பாவிகளை இரட்சிக்க முடியாது. இரட்சிப்பு இயேசுவால் மட்டுமே. ஆனால், மரியாளிடம் இருந்த பண்புகளை யாரும் குறை கூற முடியாது. ஆக, வேதாகமத்தில் பரிசுத்த ஆவியினால் கொடுக்கப்பட்ட வார்த்தைகளை கேட்கும், வாசிக்கும் நாம் மரியாளைப் போல இதோ நன் ஆண்டவருக்கு அடிமை உம்முடைய வார்த்தையின்படியே ஆகக்கடவது என்று வார்த்தைகளுக்கு நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். என்ன துன்பம் வந்தாலும் இருதயத்திற்குள்ளே போட்டுக் கொண்டு அவர் சித்தம் நிறைவேற நம்மை அர்ப்பணிப்போம். தேவன் தாமே அப்படிச் செய்ய உதவி செய்வாராக! ஆமென்!

***- ரேச்சல் ராஜநாயகம்***

வாலிபர் பகுதி

# தேவனுடைய கரத்தில் விட்டுவிடுங்கள் !

காலையில் கிழக்கை வெளுக்கச் செய்யும் ஒளிப் பிழம்பாகிய கதிரவனையும், வான வீதியில் உலாவரும் இரவு நேர விண் விளக்காகிய வெண் நிலாவையும், கறுப்பு நிறத்தை அதிகம் விரும்பி உடுத்திக் கொண்ட இரவு நேர வான நிலத்தில் விதைக்கப்பட்ட நவமணிகளாகிய தாரகைகளையும், ஆர்ப்பரிக்கும் அலைகளைக் கொண்ட ஆழியையும், வெண் முகிலைத் தழுவி நிற்கும் மலைமுகடுகளையும், பூமிக்கடியில் வேர்விட்டு வளர்ந்து நின்று நிழல் தரும் தருக்களையும் நீர்நிலைகளில் இங்குமங்கும் நீந்தி விளையாடும் கயல்களையும், அடர்த்தியான வனப்பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் மிருக ஜீவன்களையும் ஆண்டு கொள்ளவும், அனுபவிக்கவும் மண்ணிலிருந்து மனிதனை வனைந்து தன் சாயலில் உருவாக்கியது தேவனுடைய வல்லமை வாய்ந்த கரங்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை என்பதை என்னோடு நீங்களும் ஒப்புக் கொள்ளுவீர்கள் என திடமாக நம்புகிறேன்.

இஸ்ரவேலின் இனிமையான பாடகனான சங்கீதக்காரன் தேவனின் வழிநடத்துதலைப் பற்றி கவின்மிகு கவிதைகள் பாடுகையில், "**உம்முடைய இரட்சிப்பின் கேடகத்தையும் எனக்குத் தந்தீர்; உம்முடைய வலதுகரம் என்னைத் தாங்குகிறது; உம்முடைய காருணியம் என்னைப் பெரியவனாக்கும்**" (சங்கீதம் 18:35) என்று இமிழ்கிறான். இனிய இளைஞனே! வாழ்க்கையைப் பற்றிய பாடங்களை அங்குலமங்குலமாக அறிந்து கொண்டிருக்கும் நண்பனே! சிந்திக்கத் தெரிந்தவனே! சிந்தைக்கினியவனே! இந்த வாலிபப் பிராயத்திலேயே நமது வாழ்க்கையை அகிலத்தைப் படைத்த அமலனின் கரத்தில் ஒப்படைக்க வேண்டும். இவ்வுலக பாடுகள் பரமனிடமிருந்து நம்மை பிரிக்கக்கூடாது, வேதனை நம்மை தேவனிடமிருந்து வேறுபடுத்தக்கூடாது இவைகளின் மத்தியிலும் நமது ஜீவனை தேவ கரத்தில் விட்டுவிட வேண்டும் என்பதற்காக இவ்வருடத்தின் இறுதியில் உங்களோடு, இப்பகுதியின் மூலம் உறவாட வருகிறேன்.

## எவைகளையெல்லாம் விட்டுவிடுவது......

எனக்கருமையான வாலிபனே! நாம் தேர்ந்தெடுக்கும் நிறம் கூட நமது குணத்தைக் காட்டும்! அது போல, நாம் யாரிடம் பழகுகிறோம் என்பது நாம் யார் என்பதைக் காட்டும்! நட்புதான் சுகங்களில் மாத்திரமல்லாமல் துயரமான நேரங்களிலும் நம் அருகிலிருக்கிறது என்பது உண்மை. நட்பு என்பது நமது சந்தோஷத்தை பெருகச் செய்ய வேண்டியது, நமது துன்பத்தை பாதியாக மாற்ற வேண்டியது, ஆனால், சிலரிடம் நமது துன்பத்தைச் சொல்லக்கூடாது;

ஏனெனில், அவர்கள் நமக்குத் தரும் ஆறுதலை விட அவர்கள் அடையும் ஆனந்தமே அதிகமாகயிருக்கும் என்பதினால். எனதருமை வாலிபனே, இந்த 2005ம் ஆண்டில், ஒரு வேளை நீ நம்பியிருந்த நண்பர்கள் உன்னை கைவிட்டிருக்கலாம், மலை போல் நம்பியிருந்தேனே, நான் மருளும் இந்நேரத்தில் மலைக்க விட்டுவிட்டானே என ஏங்கலாம்.

நமதாண்டவர் இப்பூமியிலிருக்கையில், அன்பைக் குறித்து விளக்குகையில், "**ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை**" (யோவான் 15:13) என்று மொழிந்தார். என் அன்புக்குரிய வாலிபனே, அப்படிச்சொன்னவர், உலக மக்களுக்காக தன் ஜீவனையே கொடுத்தார். இதை வாசிக்கும் உங்கள் ஒவ்வொருவருக்காக இயேசு ஆண்டவர் தன் ஜீவனைக் கொடுத்திருக்கிறார். உங்களுக்காகவும், எனக்காகவும் தன் ஜீவனைக் கொடுத்த ஒருவர் இருப்பதால், அவர் நமக்காக பிதாவினிடத்தில் வேண்டிக் கொள்வதால், அவர் மூலமாக நாம் நமது கவலைகளை தேவ கரங்களில் வைத்து விடலாம். அவர் நம்மை காப்பார், காயங்களை ஆற்றுவார், கண்ணீர் துடைப்பார் என்பதினால், சங்கீதக்காரன் சொல்வது போல, "**என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது; என் சத்ருக்களின் கைக்கும் என்னைத் துன்பப்படுத்துகிறவர்களின் கைக்கும் என்னைத் தப்புவியும்**" (31:15) என்று நாமும் எதிர்காலத்தை அவர் கையில் தந்து இப்படியாக ஜெபிக்கலாம்.

இப்புவியின் வாழ்வு நிரந்தரமானதல்ல, அது மாத்திரமல்ல அவ்வாழ்வின் ஒவ்வொரு நிமிடமும் எப்படி மாறும் என்பது நமக்குத் தெரியாது. நாம் நினையாத நாழிகையில் நாசியின் சுவாசம் நின்று போகும் அளவுக்கு திடீர் என்று பூகம்பமும், வெள்ளமும், சுனாமியும், கொள்ளை நோயும் நம்மை தாக்குகிறது. இவைகளால், நமக்கு அன்பானவர்களை நாம் இழந்திருப்போம் அல்லது நாமே நேரடியாக பாதிக்கப்பட்டிருப்போம். இவைகளை நினைத்து அநேகர் இறைவனை நொந்து கொள்ளுகிறோம். ஆனால், ஆண்டவர் ஒருவனையும் பொல்லாங்கினால் சோதிப்பவர் அல்ல. அவர் இரக்கமும், மனவுருக்கமும், நீடிய சாந்தமுமுள்ளவர். அவர் துன்மார்க்கனுடைய மரணத்தில் பிரியப்படுகிறவரல்ல. அவர் இயற்கையின் விதிகளில் தலையிடுவதில்லை. அதாவது இயற்கையை அதன் போக்கில் விடுகிறார். இயற்கையின் மாற்றங்களால் தான் பூகம்பம், சுனாமி, வெள்ளம் போன்றவைகள் நடக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

எனக்கன்பான இளைஞர்களே! அநேகர் தேவன் ஜெபத்திற்கு பதில் அளிப்பதில்லை என்கிறார்கள். ஜெபத்திற்கு தேவன் எப்படி பதில் அளிக்கிறார் என்பதை நாம் அறியாததினால் தான், தேவன் எனது ஜெபத்திற்கு பதில் அளிப்பதில்லை என்று புலம்புகிறோம். ஆனால், தேவன், நமது ஜெபத்திற்கு எப்படி பதில் அளிக்கிறார் என்பதை நாம் இப்பொழுது கவனிப்போம். தேவ சமூகத்தை விட்டு, தர்ஷிசுக்கு ஓடிப்போன யோனாவினால், கடலில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது. அவரவர் தங்கள் தங்கள் தேவனை நோக்கி கூப்பிட்டார்கள் ஆனால், யோனாவோ கப்பலின் அடித்தட்டில் உறங்கிக் கொண்டிருந்தான். அவனைக் கண்ட மாலுமி நீ நித்திரை பண்ணுகிறதென்ன? நீயும் வேண்டிக்கொள் என்று சொன்னான்.

யோனா ஆழியின் சீற்றத்திற்கு தான் தான் காரணம் எனக் கூறினான். கப்பலிலிருந்தோர் சீட்டுப்போட்டார்கள், சீட்டு யோனாவின் பெயருக்கு விழுந்தது. அவனை கடலில் போட்டார்கள். அவனை விழுங்கும்படி பெரிய மீனுக்கு தேவன் கட்டளையிட்டிருந்தார். அந்த மீன் வயிற்றிலிருந்து, அவன் தேவனை நோக்கி வேண்டிக் கொண்டான். என்னை விடுதலையாக்கும் என இரஞ்சினான். நான் துதியின் சத்தத்தோடே உமக்குப் பலியிடுவேன்; பொருத்தனையைச் செலுத்துவேன் என்று வேண்டிக் கொண்டான். கர்த்தர் பரலோகத்திலிருந்து, தன் செவியை இந்த ஜெபத்திற்கு சாய்த்து, "ஆம்" உன்னை விடுதலையாக்கினேன் என்று பதில் தந்தார், யோனாவை மீன் கரையிலே கக்கினது என்று நாம் காண்கிறோம். ஆக, நமது வாழ்வின் சில நேரங்களின் தேவன் "ஆம்" என்று நமது ஜெபத்திற்கு பதில் தருகிறார்.

அப்போஸ்தலனாகிய பவுலை நாம் அறியாதவர்களல்ல, அவர் தமஸ்குவின் சாலையில் கர்த்தராகிய இயேசுவை கண்ட வேளையிலிருந்து இயேசுவை எத்திக்கிலும் பறைசாற்றினார். அவரின் நாமத்திற்காக யூத மார்க்கத்தில் தான் அடைந்த எல்லா உயர்வான விஷயங்களையும் விட்டுவிட்டார். இயேசுவின் சுவிசேஷத்திற்காக கல்லெறிபட்டவர், மிலாறுகளால் அடிபட்டவர், யூதர்களால் துன்பப்படுத்தப்பட்டவர், கள்ள சகோதரர்களால் மோசம்போக்கப்பட்டவர். இப்படி, நமது ஆண்டவருக்காக இவன் படாத பாடுகளே இல்லை எனச் சொல்லலாம்.

ஆனால், எனக்கன்பானவர்களே, இப்படிப்பட்ட அப்போஸ்தலன் தன் சரீரத்தில் உண்டாயிருந்த ஒரு குறைபாட்டை நீக்க, தேவனை நோக்கி ஜெபித்த போது, தேவன் அவனுக்கு என்ன பதில் கொடுத்தார் தெரியுமா? **"என் கிருபை உனக்குப் போதும் பலவீனத்திலே, என் பலம் பூரணமாய் விளங்கும்"** (II கொரி. 12:7,8) என்றார். அதாவது, அப்போஸ்தலனாகிய பவுலின் ஜெபத்திற்கு "இல்லை" என்ற பதிலை தேவன் கொடுத்திருக்கிறார். அவரும் அப்பதிலை ஏற்றுக்கொண்டு, தன் வாழ்க்கையில் அவருக்காக இன்னும் அதிகமாக உழைக்க ஆரம்பித்தார். நாமும் தேவன் நம் வாழ்வில் "இல்லை" என்ற பதிலை தரும்போது, அதை ஏற்றுக் கொண்டு அவருக்காக உழைக்க வேண்டும்.

பழைய ஏற்பாட்டு தாசனாகிய மோசேயை பற்றி நாம் அறிவோம். எகிப்தில் இருக்கும்போதே எபிரேயர்களுக்காக குரல் எழுப்பியவன் அவர்களை வழிநடத்த வேண்டும் என்று எண்ணியவன். ஆனால், தேவன் அவனுக்கு "காத்திரு" என்று சொல்லி, 40 வருடம் அவனை ஆடுகளின் பின்னே போகவைத்து, அவனை அவ்வேளைக்காக ஆயத்தம் செய்த பின். மோசேயை இஸ்ரவேல் ஜனங்களை விடுதலையாக்கும்படியாக அனுப்புகிறார். ஆகவே, நமது வாழ்விலும், "காத்திரு" என்று தேவன் சொல்லும் போது சலித்துக்கொள்ளாமல், தேவ சித்தம் நிறைவேற காத்திருப்போம். எனக்கன்பானவர்களே, இவ்வருடம் நமக்கு எப்படி யிருந்தாலும், எதிர்காலத்தை தனது கரத்தில் வைத்திருக்கும், தேவனிடம் நமது எதிர்காலத்தை ஒப்படைப்போம். அவர் நம்மை இனிதாக வழிநடத்துவார். ஆமென்!

*ஜே. பிக்கின்ஸ்*

# தேவ குமாரனுக்குச் செவிகொடுங்கள் !

சிறுவர் பகுதி

தேவனுக்கும், எனக்கும் மிகவும் பிரியமான சிறுதம்பிகளே, தங்கைகளே, கள்ளம் கபடமில்லாத பிராயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் உங்களையெல்லாம் இவ்வருடத்தின் இறுதி மாதத்தில் இப்பகுதியின் வாயிலாக சந்திப்பதில் நான் மிகவும் மகிழச்சி அடைகிறேன். இச்சிறு பிராயத்தில் நாம் யாருக்கு செவிகொடுக்கிறோம் என்பது மிகவும் முக்கியமான ஒன்றாயிருப்பதால் இம்மாதம், நாம் ஆவிக்குரிய விஷயத்தில் யாருக்கு செவிகொடுக்க வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்வோம் வாருங்கள்.

இயேசு ஆண்டவர் இப்பூமியில் இருந்த சமயம், ஒரு நாள் தனது மூன்று நெருங்கிய நண்பர்களோடு ஒரு மலைக்கு ஜெபிக்கும்படி போனார். இயேசு ஜெபித்துக்கொண்டிருக்கையில் பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோர் தூங்கிவிட்டனர். அவர்கள் எவ்வளவு நேரம் தூங்கினார்கள் என்பது நமக்குத் தெரியவில்லை. ஆனால் அவர்கள் கண் திறந்த போது, அவர்கள் கண்களால் நம்பமுடியாத காட்சியைப் பார்த்தார்கள். மோசேயோடும், எலியாவோடும் இயேசு பேசிக்கொண்டிருந்தார்! எனக்கன்பான, தம்பி தங்கைகளே! ஒன்றை நாம் மறக்கக் கூடாது, இயேசு இப்பூமியில் வாழ்ந்த போது, மோசே மரித்து 1600 ஆண்டுகள் ஓடிவிட்டது, எலியா மரித்து 700 ஆண்டுகள் கடந்து விட்டது. ஆனால், அவர்களிருவரோடும் அவர் காட்சி தந்தார்.

எனக்கன்பானவர்களே! இதை நீங்கள் யோசித்தாவது பார்க்க முடிகிறதா? நீங்கள் அங்கே இருந்திருந்தால் என்ன நினைத்திருப்போம்? பேதுருவும், நம்மைப்போல உணர்ச்சிவசப்பட்டு, குழம்பிப் போய் இயேசுவிடம், "... ஐயரே, நாம் இங்கே இருக்கிறது நல்லது, உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக, மூன்று கூடாரங்களைப் போடுவோம் என்று, தான் சொல்லுகிறது இன்னதென்று அறியாமல் சொன்னான்". (லூக்கா. 9:33) இந்த மகத்தான மூவருக்கு மரியாதை செலுத்த வேண்டும் என பேதுரு நினைத்து இப்படி சொல்லியிருக்கிறான்.

இதற்குப்பின், இன்னும் ஆச்சரியமான காரியம் நடந்தது. ஒரு மேகம் அவர்களையெல்லாம் மூடியது. அந்த மேகத்திலிருந்து, "இவர் என்னுடைய நேச குமாரன். **இவருக்குச் செவி கொடுங்கள்**" (லூக்கா. 9:35) என்று ஒரு சத்தமுண்டாயிற்று. பேதுரு, யோவான், யாக்கோபு ஆகிய மூவரும் தேவன்



பேச கேட்டார்கள். அவர்களுக்கு அது அதிர்ச்சியாயிருந்திருக்கும் என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அவர்கள் அந்த சத்தத்தைக் கேட்டபின், இயேசு மாத்திரம் நிற்பதைக் காண்டார்கள். இயேசுவும், ஆச்சரியத்தில் மூழ்கிய அந்த மூன்று நெருங்கிய சீடர்களும் மலையிலிருந்து கீழே இறங்கினார்கள்.

இயேசுவின் வாழ்க்கையில் நடந்த இச்சம்பவத்திலிருந்து நாம் என்ன பாடங்களை கற்றுக்கொள்ளலாம்? குறைந்தது **இரண்டு பாடம்** நமது கண்களுக்குத் தெரிகிறது. **முதலாவது**, மோசேயும், எலியாவும் மரித்து இவ்வுலகத்தை விட்டுப் போயிருந்தாலும் அவர்கள் இன்னொரு இடத்தில் உயிரோடு இருந்தார்கள் என்பதே அது. நாம் மரிக்கும் போது, நமது சரீரம் இப்பூமியில் புதைக்கப்படுகிறது. ஆனால், நமது ஆத்துமா தொடர்ந்து ஜீவிக்கிறது. ஒருநாளில், தேவன் ஒவ்வொருவரையும் மீண்டும் உயிரோடு எழுப்புவார். தேவனைப் பிரியப்படுத்தும்படி வாழ்ந்தவர்கள், தேவனோடு இருக்கும்படி எழுந்திருப்பார்கள், ஆனால், மற்றவர்கள் தேவனிடமிருந்து பிரிக்கப்படுவார்கள். (யோவான் 5:28,29) இயேசு, தம்மை பின்பற்றுகிறவர் களுக்காக ஒரு இடத்தை இப்பொழுது ஆயத்தம் செய்து கொணடிருக்கிறார். (யோவான். 14:1-4).

**இரண்டாவதாக**, இந்த நிகழ்விலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடம் என்னவென்றால், நாம் இன்று இயேசுவின் போதனைக்குத் தான் செவி கொடுக்க வேண்டும் என்பது. இயேசு வருவதற்கு முன் ஜனங்கள் மோசேக்கும், எலியாவை போன்ற தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடுத்து கொண்டு வந்தார்கள். ஆனால், இப்பொழுது, நாம் தேவனுக்கு பிரியமாக இருக்க விரும்பினால் **இயேசுவை நம்பி, அவருடைய போதனையை பின்பற்ற வேண்டும்.** தேவன், நாம் அவருடைய குமாரனுக்கு செவி கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறார். ஆகவே, இச்சிறுபிராயத்திலிருந்தே இயேசு ஆண்டவருக்கு செவிகொடுப்போம். இயேசு ஆண்டவரின் உபதேசம் புதிய ஏற்பாட்டில் உள்ளது. தேவனுக்குப் பிரியமாக நடக்க இவைகளின்படி செய்வோம்.

***R.A.R. NAYAGAM***

# விசுவாசத்தின் அடிப்படைகள்

பிதாவாகிய தேவனும் அவருடைய ஒரே பெயரான குமாரனும் நம்மிடம் நட்பை காண்பிப்பதற்கு அநேக காரியங்களை செய்திருக்கிறார்கள். அந்த அற்புதமான நட்புக்கு நாம் எப்படி நன்றி செலுத்த வேண்டும் என்று தேவன் சொன்ன ஏழு வசனங்களை நாம் படித்தோம். மேலும் சில வசனங்களை நாம் பார்ப்போம்.

மாற்கு 5:19யை வாசியுங்கள் இங்கே இயேசு ஒரு மனுஷனிடத்திலிருந்து பிசாசை விரட்டினார் என்பதை நாம் உணர்கிறோம். ஆனால் இந்நாட்களில் இவ்வகையான அற்புத அடையாளங்கள் நடைபெறுவதில்லை. ஆயினும் நம்முடைய சிறந்த நண்பர் நாம் கவனம் செலுத்தும்படியாக நமக்கு ஒரு பாடத்தை வைத்து விட்டு சென்றிருக்கிறார். இயேசு அந்த மனிதனிடம் உன் வீட்டிற்குப் போய், கர்த்தர் உனக்கு இரங்கி உனக்குச் செய்தவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவியென்று சொன்னார்.

எபேசி 3:8 நீங்களும் நானும் சுவிசேஷம் அறிவிப்பதை கிருபையாக எண்ணவேண்டும், நாம் கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தை அநேகரிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்க வேண்டும். இந்த தேசத்தில் பலலட்சம் மக்கள் நம்முடைய அருமை நண்பருடைய சித்தத்திற்கு தங்கள் சித்தத்தை ஒப்புக் கொடுக்காமலிருக்கிறார்கள். அவர்களிடத்தில் இயேசு எவ்வளவு சிறந்தவர் என்றும், எவ்வளவு விலையுயர்ந்த ஆசீர்வாதங்கள் அவருக்குள்ளும், அவருடைய மெய்யான சபையில் இருக்கிறதென்றும் அறிவிப்பது எவ்வளவு சந்தோஷத்தை நமக்கு கொடுக்கும்.

பிலிப். 3:7-14யை வாசியுங்கள் அந்த வசனங்களில் நீங்களும், நானும் எப்படி நம்முடைய அன்பையும், நன்றியையும் இயேசுவினிடத்தில் செலுத்துவது என்பது பற்றி பவுல் மூலமாக அநேக காரியங்களை கற்றுக்கொள்ள முடியும். 5,6 வசனங்களில் தான் ஒரு எபிரெயனாக செய்த சாதனைகளை பட்டியலிடுகிறார், அவைகள் பவுலுக்கு லாபமாக இருந்தது அவைகள் மனுஷருக்கு முன்பாக மிகப் பெரிய சாதனையாக காணப்பட்டது, அவைகள் மனுஷர் மத்தியில் பவுலுக்கு பெயரையும், புகழையும், பெருமையையும், கனத்தையும் கொண்டுவந்தது. மனுஷீக ரீதியில் பார்த்தால் அவைகள் விலையேறப்பெற்றவைகள்.

ஆனால், 7ஆம் வசனத்தில் பவுல் அவைகளெல்லாவற்றையும் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினார். உண்மையிலேயே கிறிஸ்துவோடு ஒப்பிடும்போது பவுல் முன்பு செய்த சாதனைகளெல்லாம் மதிப்பற்றவைகள்

தான்! பவுல் கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் விட்டுவிட மனதாயிருந்தார். பவுல் எந்த அளவுக்கு இயேசுவை நேசித்தார் என்றும் இயேசு பவுலுக்கு எவ்வளவு விலையேறப் பெற்றவராகவும் இருந்தார் என்று எண்ணிப்பாருங்கள்! அவர் உங்களுக்கும் எனக்கும் எவ்வளவு விலையேறப் பெற்றவராயிருக்கிறார்? அதுமாத்திரமல்ல, கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று பவுல் எண்ணினார். அதாவது பவுலைப் பொறுத்தவரை கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவே எல்லாவற்றையும் விட மேன்மையானது சிறந்ததாகவும் காணப்பட்டது. கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவு என்ற வாக்கியத்தைப் பொறுத்தவரை இயேசுவின் மனப்பான்மை, அவருடைய சித்தம், அவருடைய மாதிரி, அன்பு மற்றும் ஒவ்வொரு உண்மையுள்ள கிறிஸ்தவர்களிடத்திலும் அவருடைய அருமையான உறவு ஆகியவைகள் அடங்கியிருக்கிறது.

மேலும், அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லும்போது கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டதாகவும் குப்பையுமாக எண்ணுவதாகவும் சொல்கிறார். தான் இழந்தவைகளைப் பற்றிப் பவுலின் மதிப்பீடு என்ன? எல்லாவற்றையும் குப்பையுமாக எண்ணினார்! அப்படியாக பவுல் தான் முன்பு செய்த சாதனைகளெல்லாம் இயேசுவோடு ஒப்பிடும்போது அற்பமானவை என்று சொல்கிறார். தான் ஆதாயப்படுத்தினதோடு ஒப்பிடும் போது எல்லாம் மதிப்பற்றவைகள் என்று பவுல் சொல்கிறார். அப்படி பவுல் எதை ஆதாயப்படுத்தினார்? கிறிஸ்துவை! அதாவது தேவனுடைய நேசகுமாரனின் ஐக்கியத்தில் இணைக்கப்பட பெரிதும் விரும்பினார் அந்த குறிக்கோளை அடைய அதை நிறைவேற்ற அருமையான அப்போஸ்தலன் எல்லாவற்றையும் விட்டுவிட விரும்பினார். பத்தாம் வசனத்தில் பவுல் எதற்காக எல்லாவற்றையும் கிறிஸ்துவுக்காக விட்டுவிட்டார் என்பதை விளக்குகிறார்.

**முதலாவதாக,** பவுல் "கிறிஸ்துவை அறிந்து கொள்ளுவதற்கு" என்று சொல்கிறார். இவ்விடத்தில் அறிந்து கொள்ளுவதற்கு என்ற வார்த்தையானது இயேசுவை நம்முடைய அறிவினால் அடையாளம் கண்டு கொள்வதை விட மேலானதாகும், மேலும் அதனுடைய அர்த்தம் என்னவென்றால் கிறிஸ்துவையும், அவருடைய சித்தத்தையும் விட மேலான ஒன்றை அறிவதாகும், அவரையும், அவரைப்பற்றிய வரலாற்று உண்மைகளை அறிவதை விட அதிகமான ஒன்றாகும். இவைகளெல்லாம் முக்கியமானது தான் ஆனால், அதுமாத்திரம் போதாது இதனுடைய அர்த்தம் என்னவென்றால் கர்த்தருடைய குணாதிசயங்களையும், அவருடைய வேலையையும் முழுமையாக அறிந்து கொள்வதை குறிக்கும். மேலும் அதனுடைய அர்த்தம் என்னவென்றால் ஜீவனுள்ள கர்த்தரோடு நெருங்கிய உறவு வைத்துக்கொள்வதாகும். இந்த வார்த்தையானது அறிந்து கொள்ளுகிற ஒருவர் மீது அறிப்படுகிறவர் செலுத்தும் செல்வாக்கை வலியுறுத்துகிறது. இந்த நபருக்கு இயேசு நிஜமாக இருக்கிறார், மேலும் கிறிஸ்து தன்னுடைய வார்த்தையினாலும், உதாரணத்தினாலும் தம்முடைய செல்வாக்கை செலுத்த

இந்த நபர் அனுமதிக்கிறார். ஆகவே கிறிஸ்துவை அறிந்து கொள்ளுகிற நபர் இவ்விதத்தில் கர்த்தருடைய பிரசன்னத்தை தங்களுடைய வாழ்க்கையில் உணர்ந்து கொள்ள முடியும். இயேசுவை எல்லோரைப் பார்க்கிலும் ஒரு சிறந்த நண்பராக உணர முடியும். இயேசுவை அறிந்து கொள்ளுகிற நபர் ஆவிக்குரிய பெலனையும், சந்தோஷத்தையும், ஆறுதலையும், நெருக்கமான உறவையும் இயேசுவுடன் ஐக்கியப் பட்டிருப்பதால் பெற்றுக் கொள்ள முடியும்.

**இரண்டாவதாக,** பவுல் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையை அறிந்து கொள்ள விரும்பினார். பவுல் கடந்த காலத்தில் சிலுவை தன்னுடைய வாழ்வில் ஏற்படுத்திய தாக்கத்தைப் பற்றிப் பேசுகிறார். தனக்கு மாத்திரமல்ல மற்ற கிறிஸ்தவர்களுக்கு ஏற்படுத்திய தாக்கத்தையும் பேசுகிறார். பவுல் தான் கிறிஸ்துவை தரிசிப்பதற்கு முன்பு எப்படியிருந்தார்? கர்த்தர் மரித்தோரிலிருந்து எழுந்த பிறகு எப்படியானார்? பவுல் கிறிஸ்துவை தரிசிப்பதற்கு முன்பு கிறிஸ்தவர்களை துன்பப்படுத்தினார் அவர்களை சிறையிலடைத்தார் அவர்கள் மரணத்திற்கு சம்மதம் தெரிவித்தான். ஆனால், உயிர்த்தெழுந்த கர்த்தரை சந்தித்தப் பிறகு, அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து முற்றிலும் வித்தியாசமான மனிதனாக மாறினான்.

இயேசுவின் உயிர்த்தெழுதல் நம்முடைய வாழ்விலும் அதே வல்லமையான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அப்படி ஏற்படுத்தியிருக்கிறதா?

**மூன்றாவது,** பவுல் இயேசுவினுடைய பாடுகளின் ஐக்கியத்தை அறிய விரும்பினார். "ஐக்கியம்" என்கிற பதமானது பகிர்ந்து கொள்வது அல்லது சேர்ந்து பங்கு பெறுவது என்று மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, பவுல் தானும் மற்ற கிறிஸ்தவர்களும் இயேசுவின் பாடுகளில் பங்கு பெறவேண்டும் என்று விரும்பினார். ஒரு நிமிடம் அதை யோசித்துப் பாருங்கள்; கிறிஸ்து எதற்காக பாடுபட்டார்? தான் ஒரு பூரணமான வாழ்க்கை வாழ்ந்தாலும் தேவனுடைய வார்த்தையை வல்லமையாகவும், தைரியமாகவும் பிரசங்கம் செய்ததாலும் பாடுபட்டார். நம்முடைய சிறந்த நண்பராகிய இயேசு எதுவரைப் பாடுபட்டார்? மரணப்பரியந்தம் அதாவது சிலுவையின் மரண பரியந்தம் வரை பாடுபட்டார்.

## பூமி உருண்டை

**அ**வர் பூமி உருண்டையின்மேல் வீற்றிருக்கிறவர் என்று ஏசாயா சொல்கிறார். [ஏசா. 40:22] இந்த சந்தர்ப்பத்தில் ஏசாயா தேவனுடைய சர்வாதிகாரத்தை எடுத்துச் சொல்கிறார். அத்தோடு, இங்கு ஒரு விஞ்ஞான உண்மையையும் எடுத்துக் காட்டுகிறார். ஏசாயா நாட்களிலும், ஏசாயாவிற்குப் பின் பல சந்ததிகளுக்கு பூமி தட்டையானது என்றே நம்பினர். ஆனால், ஏசாயா அதற்கு நேர் எதிரிடையாகச் சொல்லியுள்ளார். அவருக்கு இந்த உண்மை எப்படித் தெரிந்தது?

நீங்களும் நானும் இயேசுவை நேசித்தால் அவருக்கு நன்றியுள்ளவர்களாயிருந்தால் நாமும் பவுலைப் போல் கிறிஸ்துவின் பாடுகளில் பங்குபெற விரும்புவோம்.

**நான்காவது,** பிரியமான அப்போஸ்தலன் கிறிஸ்துவின் மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாக விரும்பினார் இந்த சொற்றொடர் அநேக விதங்களில் பொருள்படும். இது ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவுடன் மரிப்பது அதாவது பாவத்திற்கு மரிப்பதைக் குறிக்கும் ரோ 6:4-6; 11:13 மேலும், ஒரு கிறிஸ்தவன் மற்றவர்களுக்கு சேவை செய்வதற்காக சுயத்தை சாகடிப்பதையும் குறிக்கும். இதை தான் நம்முடைய அருமை மீட்பர் செய்தார் (பிலிப். 2:6-8; கலா. 2:20) கிறிஸ்துவுடன் பாடுகளை பகிர்ந்து கொண்டால் கடைசியில் அது சரீர மரணத்தில் கொண்டுபோய் விடும் என பவுல் அறிந்தார் என்னும் விதத்திலும் பொருள்படும்.

பவுலைப் போல தீவிரமான அன்பும், நன்றி மனப்பான்மையும் நம்முடைய அருமை இரட்சகர் மீது நமக்கு இருந்தால் கீழ்காணும் விதங்களில் நம்மை அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாக நம்மைத் தூண்டும், மேலும்ப வுல் 12-14 வசனங்களில் கூறியுள்ள காரியங்களை செய்ய நம்மை ஏவும்.

உதாரணமாக நாம் அடையவேண்டிய இலக்கை நாம் அடையவில்லை என்றும் கிறிஸ்து புதிய ஏற்பாட்டில் நாம் அடைய வேண்டும் என்று கொடுத்திருக்கிற அல்லது ஏற்படுத்தியிருக்கிற இலக்கை நாம் அடையவில்லை என்று நாம் உணர்ந்தால், அந்த குறைகளை நாம் பார்த்து பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி ஆவிக்குரிய முதிர்ச்சியடைவோம்.

பின்னானவைகளை மறந்து என்றால் நம்முடைய பாவப் பழக்க வழக்கங்களை மறந்து அதாவது, அவைகளிலிருந்து மனந்திரும்பி தேவனிடத்தில் அறிக்கை செய்து தேவன் நம்முடைய அருமை நண்பராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவி சுத்திகரித்தார் என்று அறிந்து கொள்வதும், நம்முடைய பழைய சாதனைகளை மறப்பதும் பின்னானவைகளை மறப்பதாகும். மேலும் நாம் முன்னானவைகளை நாடி கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடரவேண்டும்.

நாம் நம்முடைய அன்றாட வாழ்வில் அவரிடமும், சக மனுஷர்களிடமும் அன்பு கொண்டு, சேவை செய்வதின் மூலமாகவும் நம்முடைய சிறந்த நண்பருக்கு நாம் நம்முடைய நன்றியை வெளிப்படுத்துவோம்!

அடுத்த மாதம் முதல் நூற்றாண்டில் மனமாற்றம் அடைந்தவர்கள் ஞானஸ்நானத்திற்கு பிறகு எந்த சபையில் சேர்ந்தார்கள்? என்ற கேள்விக்கு வசனங்கள் மூலமாக நாம் பதிலைப் பார்க்கலாம்.

*சார்லி டீபால்மா.*

# கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள்

**தி**ருமறை ஆசான் வாசகர்களாகிய உங்கள் ஒவ்வொருவரையும் இயேசுகிறிஸ்துவின் இனிய இன்ப நாமத்திலே சுகமாயிருக்கும்படி அன்போடு கூட வாழ்த்துகின்றோம்.

நம்முடைய ஆண்டவர் முதலாவதாகப் பிரசங்கித்த மலையளவு ஞான அர்த்தங்களடங்கிய மலைப்பிரசங்கத்தின் மூலம் உங்களை சந்திப்பதிலே மிகவும் உவகையடைகிறேன். நம் செய்தியின் வசனப் பகுதி மத்தேயு 7வது அதிகாரம் 7வது வசனம். வேதாகம எண்களிலே ஏழு என்பது முழுமையைக் குறிக்கக்கூடியதாய் இருக்கிறது. நம் ஆத்துமாவைத் தேற்றக் கூடிய முழுமையான செய்தியை நாம் பெற இருக்கிறோம். மத். 7:7ல் இருக்கின்ற கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள் என்ற மூன்று வார்த்தைகளை நாம் தெரிந்து கொள்வோம்.

## I கேளுங்கள் :

ரோமர் 10:17ல் விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும். (1) கேட்பது என்பது காதுகள் வழியே கேட்கின்ற விஷயங்கள் (2) மற்றொரு கேட்பது என்பது ஒருவரிடம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளும்படியாகக் கேட்பது நாம் பெற்றுக் கொள்ளக்கூடியதை தியானிப்போம். சரி பிரியமானவர்களே நாம் எதைக் கேட்பது.

### ஞானத்தைக்கேளுங்கள் :

இஸ்ரவேலை ஆண்ட ராஜாக்களில் ஒருவனாகிய தாவீதின் குமாரன் சாலமோனுக்கு தரிசனமாகி நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் என்றார். (II நாளா 1:7-12) சாலமோன் கர்த்தரிடம் ஞானத்தைத் தரும்படி கேட்டான். அது தேவனுடைய பார்வையில் அருமையாய் இருந்தது. சாலமோனின் ஞானம் காலங்களைக் கடந்து இன்றளவும் பேசப்படுகிறது. அதுமாத்திரமல்ல பிரியமானவர்களே, கேட்ட ஞானத்தையும் கொடுத்தார், கேளாத ஐசுவரியத்தையும் கொடுத்தார். (ரோமர் 11:33) ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் பிரமிக்கதக்க ஞானமுடையவர்களை நாம் பார்க்கிறோமல்லவா? அது தேவனுடைய பார்வையில் மிக, மிக, சொற்பமானதாம் (1கொரி. 1:25) ஞானத்தைக் கேட்பது என முடிவு செய்திருப்பீர்கள். அப்படியானால் யாரிடத்தில் கேட்பது.

**பிதாவினிடத்தில் கேளுங்கள் யாக். 1:5**

நம் தேவன் அன்பே உருவானவர் 1 யோ. 4;8 தன்னிடத்தில் கேட்பவர்களை கடிந்து கொள்ளாமல் யாவருக்கும் சம்பூர்ணமாய் கொடுப்பவராக இருக்கிறார். ஞானம் என்பது என்ன? உண்மையைப் புரிந்து கொள்ளுதல், சரியான திட்டமான முடிவு எடுத்தல் யோவா 17:3 தேவனையும், குமாரனையும் அறிந்து கொள்வதே நித்திய ஜீவன். ஒருவேளை இந்த தேவ ரகசியத்தை அறியாதவர்கள் (யோவான் 7:49) பரிதாபத்திற் குரியவர்களே கொலோ 1:9ல் ஞானம், அறிவு ஆகியவைகளெல்லாம், சகல பரிபூரணமும் பரிபூரணமான தேவ ஆசீர்வாதங்களும் கிறிஸ்துவுக்குள்ளே தான் இருக்கிறது. கிறிஸ்துவுக்கு வெளியே கிடைக்கின்ற அறிவெல்லாம் இப்பூமிக்கு மட்டுமே பயன்படும். நித்தியத்திற்கு நம்மை கொண்டு செல்லாது.

பாருங்கள், பேதுரு அந்திரேயா போன்றவர்கள் நம்மைப்போல் சாதாரண மனிதர்கள் ஆனால், (அப். 2) அவர்களைக் கொண்டு தான் அநேகர் தேவனின் ராஜ்யத்தில் பிரவேசிக்க காரணமாய் இருந்தது. சங் 36:9 இந்த அறிவு மிகவும் ஆச்சர்யமாய் இருக்கின்றதல்லவா? ஆம்! பிரியமானவர்களே அந்த ஆச்சர்யமான தேவ ஞானத்தையே நீங்கள் அதிகமாய் கேட்டு பெற்றுக் கொள்ளுங்கள் சங்கீதம் 119:72 பொன்னைப் பார்க்கிலும் வெள்ளியைப் பார்க்கிலும் விலையேறப் பெற்றது. நீங்கள் தேவனிடம் எதை? எப்படி? கேட்கப் போகிறீர்கள் (பிலி. 3:11) அப்போஸ்தலனாகிய பவுலுக்கு கிறிஸ்துவை அறியும் அறிவிற்கு முன்பாக இந்த உலக செல்வங்கள் குப்பையாகத் தோன்றியது நமக்கு எப்படித் தோன்றுகிறது?

**II தேடுங்கள்**

நம்முடைய நாட்களிலே மனிதர்களின் தேடலுக்கு அளவே இல்லை. ஆனால் என்ன முயன்றாலும் மனிதனின் தேவனின் கிரியைகளை அறியமுடியாது. (ஏசா. 55:9) வானத்திற்கும் பூமிக்கும் எவ்வளவு வித்தியாசமோ அவ்வளவு வித்தியாசம் தேவரகசியமும் மானிட அறிவும்.

ஆனால் பரிசுத்த வேதாகமத்தில் கொலோ. 3:2-3 கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற ஒவ்வொருவரும் மேலானவைகளையே தேடவேண்டும். வசனங்களை கூர்ந்து கவனியுங்கள் பூமியில் உள்ளவைகளையல்ல ஏனெனில் நம் ஆண்டவராகிய கிறிஸ்து (லூக். 2:7) வழிப்போக்கர்கள் தங்க கூடிய சத்திரத்தின் வெளியே தான் பிறந்தார். (மத். 8:20) தலை சாய்க்கவும் இடமில்லாதவராய் இந்த பூமியிலே சுற்றித் திரிந்தார். (மாற். 15:24) சிலுவை மரணத்தின் போது அவரது அங்கியை கூட போர்ச் சேவகர்கள் எடுத்துக் கொண்டார்கள். ( II கொரி 8:9) கிறிஸ்துவின் கிருபையைப் பாருங்கள் நமது நிமித்தம் தம்மை ஒரு தரித்திரரைப் போலாக்கினார் என்றால் அது ஏன்? என்பதை சிந்தியுங்கள். தேவகுமாரன் சகல அதிகாரமும் உடைய கிறிஸ்து ஏன் தம்மை ஒரு அடிமையைப் போலாக்கினார். எதைத் தேடினார்?

## இழந்து போனதை தேடினார்

1 தீமோ 1:15 பாவிகளை இரட்சிக்கவே .... லூக் 19:10 இழந்து போனதை தேடவும் ...... ரோம. 3:23 நாம் பாவம் செய்து தேவ மகிமையை இழந்து போனோம். அன்பு, நீதி, பரிசுத்தம், நித்திய ஜீவன் இவைகளை இழந்து (எபே 2:1) ஆத்துமாவிலே மரித்துப் போனோம். கிறிஸ்து நம் ஆத்து மாக்களை தேவனோடு ஐக்கியப்படுத்தவுமே கிறிஸ்து வந்தார். அதை நாடியே இந்த பூமியில் அவர் சுற்றித் திரிந்தார். (எபே. 4:18) இன்று அநேகர் தங்கள் மாந்த அறிவிலே மிகுந்து சரீரத்திலே வெற்றியடைகின்றனர். ஆத்துமாவிலே படுபயங்கரமான தோல்வியிலே உள்ளனர். காரணம் அவர்களின் தேடுதல் நித்தியத்திற்குரியதல்ல. உங்கள் தேடுதல் எப்படிப் பட்டதாய் இருக்கிறது பிரியமானவர்களே (கொலோ 3:17)

## III தட்டுங்கள் - அப்போஸ். 10:1-6

கொர்நெலியுவின் ஜெபங்களும் தானதருமங்களும் தேவ சமூகத்தின் கதவுகளைத் தட்டி தேவதூதன் அவன் வீட்டிற்கு வந்து இரட்சிப்பின் வழியை அறிய பேதுருவை அழைக்கும்படி கூறினார். ஏன் தேவ தூதனே அந்த வேளையைச் செய்யவில்லை? சிந்தியுங்கள்.

யோவா 3:16 கிறிஸ்துவில் விசுவாசம் கொள்ளுங்கள் யோவா 17:3 பிதாவையும், குமாரனையும் அறிந்து சத்தியமாகிய வசனத்தை விசுவாசியுங்கள் யோவா 8:32 சத்தியமே சகல பாவத்திலிருந்தும் விடுதலையைத்தரும்.

## எது சத்தியம்

யோவா 17:17 நம்மை பரிசுத்தமாக்கும் வசனமே சத்தியம். யோவா 14:6 கிறிஸ்துவே சத்தியம் அவரே ஜீவன், அவரே ஒளி இந்த இரகசியங்களை அறியும்படி நாடி தேவ சமூகத்தைத் தட்டுங்கள் அதுவே அவர் பார்வையில் உகந்தது. ஆண்டவர் உங்களுக்காய் கரங்களை விரித்தவராய் காத்திருக்கிறார்.

## ஆண்டவர் தட்டுகிறார்; உன்னதப்பாட்டு 5:1-3

நேசர் என் பிரியமே ரூபவதியே! என் புறாவே! என் உத்தமியே! கதவைத்திற என்றார். அவளோ நான் நித்திரைக்கு தயாரானேன், வஸ்திரங்கள் அழுக்காகி விடுமே என்று சோம்பலாய் இருந்தாள். நேசர் போய்விட்டார்.

**வெளி 3:20** இதோ வாசற்படியில் நின்று கதவை தட்டுகிறேன்.... நீங்கள் அவர் சத்தத்தைக் கேட்கிறீர்களா? ஆம் என்றால் (1) மத். 6:33 முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தை (கிறிஸ்துவின் சபையை) தேடுங்கள். (2) மேலானவைகளை தேடுங்கள் (3) ஞானத்தைக் கேளுங்கள். இப்படிச் செய்வீர்களானால் உங்கள் கிறிஸ்தவ வாழ்வில் சுகமாய் இருப்பீர்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பராக ஆமென்!.

***S.PITCHAIMUTHU***



## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

## PLEASE WATCH

ETC TV

Every Sunday from 6.00 to 6.30 a.m.

for a Christian Programme in Hindi

Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2003
Licensed to Post without pre payment
TN / WR / ERD / 03 / WRP / 2003

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi
Annul Subscription Rs.30/-

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு**

## ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட

**ஓர் இலவச பயிற்சி.**

**இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.**

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குனர்,
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ. எண் - 27, காங்கேயம் - 638 701.
தமிழ்நாடு. இந்தியா.

---

திருமறை ஆசான் இதழின் ஆசிரியர் திருமறை தியானம் நிகழ்ச்சியில் நற்செய்திப்பேருரை ஆற்றுகிறார்.



## S.S. Music TV ல்

## திருமறை தியானம்

**பிரதி திங்கட்கிழமை காலை 7.15 - 7.45 மணி**

## தமிழன் டிவி யில்

## திருமறை தியானம்



**பிரதி சனிக்கிழமை காலை 7.15 - 7.30 மணி**
**பிரதி ஞாயிறு இரவு 9.45 - 10.00 மணி**

Published by Church of Christ, Kangayam.
Printed at : Konar Printers, Madurai. Editor : S. Rajanayagam.